REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூன் 22 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 91 இல. 146 | Thursday 22, June, 2023 | 12பக்கங்கள் | 50/-




### இடைநடுவில் கைவிடப்பட்ட கட்டுநாயக்க விமான நிலைய

# இரண்டாவது ஓடுதளத்தின் நிர்மாண பணிகள் ஆரம்பம்

### பணிகளை துரித கதியில் பூர்த்திசெய்ய அரசு நடவடிக்கை



கடன் மீள் கட்டமைப்பு பயன் கிடைப்பதற்கு முன் விமான நிலைய, விமான சேவைகள் நிறுவனங்களின் நிதியை பயன்படுத்தவும் தீர்மானம்

இடை நடுவில் கைவிடப்பட்டிருந்த கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது ஓடுதளம் அமைக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார வீழ்ச்சி காரணமாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாவது ஓடுதளம் அமைக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. நாடு பொருளாதார ரீதியாக

05

## இலங்கை-மலேசியாவுக்கிடையே விமான சேவையை அதிகரிக்க திட்டம்

### சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதே நோக்கம்



மலேசியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான விமான சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன விடுத்த கோரிக்கைக்கு மலேசிய உயர்ஸ்தானிகர் பத்லி ஹிஷாம் இணக்கம் தெரிவித்துள்ளார்.

மலேசிய விமான சேவை மேலதிக விமான சேவைகளை இயக்க திட்டமிட்டுள்ளது. மலேசிய உயர்ஸ்தானிகர் பத்லி ஹிஷாம் ஆதம் (20) அலரிமாளிகையில் பிரதமரைச் சந்தித்து, வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை அதிகரிப்பதில் விசேட கவனம் செலுத்தி இரு நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடினார்.

மலேசியாவுக்கு வருடாந்தம் 70 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருவதாகவும், மேலதிக விமான சேவைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களில் சிலரை

05

### பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும்

## முன்னேற்றகரமான சட்டங்களை அரசு உருவாக்குவது சிறப்பானது

### சபையில் TNA எம்.பி சுமந்திரன் வரவேற்று உரை

*லோரன்ஸ் செல்வநாயகம்*



பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அரசாங்கமானது பல முன்னேற்றகரமான சட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

05

### ஊழல் எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பில்

## ஆளும், எதிரணிகள் திருத்தங்களை முன்வைத்தால் நிச்சயம் ஆராயப்படும்

### சபையில் நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவிப்பு

*லோரன்ஸ் செல்வநாயகம்*



ஊழல் எதிர்ப்பு சட்ட மூலத்துக்கு ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள் சாதகமான திருத்தங்களை முன்வைத்தால், அதனை வெளிப்படைத் தன்மையுடன் நடைமுறைப் படுத்துவதற்கு அரசாங்கம் தயாரென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஊழல்கள் மூலம்

05

## ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானதல்ல

### கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்து, பலப்படுத்துவதே அதன் நோக்கம்

*லோரன்ஸ் செல்வநாயகம்*



உத்தேச ஊடக ஒழுங்குபடுத்தல் சட்ட மூலம் அரசியலமைப்புக்கு முரணானதல்லவென அமைச்சர் மனுஷ நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தை பாதுகாத்து, பலப்படுத்துவதே இதன் முக்கியமான நோக்கம் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்னாள் அமைச்சர் டளஸ் அழகப்பெரும எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர்

05

## கிழக்கு, மலையகத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி

### ஜப்பானில் ஆளுநர் செந்தில் கலந்துரையாடல்



ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளகிழக்குமாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மியாசாகி பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவை சந்தித்து கிழக்கு மாகாணம் மற்றும் மலையகத்தின் சுற்றுலாத் துறையை ஊக்குவிப்பது குறித்து கலந்துரையாடினார்.

இலங்கையின் நீண்ட கால நண்பரான மியாசாகியின் பாராளுமன்ற உறுப்பினர் ஷிம்பே மட்ஷிதாவின் அழைப்பின் பேரிலே, அவர், ஜப்பான் பாராளுமன்றத்துக்கு

05

## தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நாமல் எம்.பி கலந்துரையாடல்

### பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நேற்று தொழிற்சங்கங்கள் சிலவற்றின் தலைவர்களை சந்தித்தார். இவ்வாரம் முழுவதும் தொடர்ந்து தொழிற்சங்க தலைவர்களை அவர் சந்திக்கவுள்ளார்.

தொழிற்சங்க தலைவர்கள் அரசாங்கம் தங்களது நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல், விற்பனை செய்தல் மற்றும் மறுசீரமைப்பது

05

### புலம்பெயர் தொழிலாளர் நலன்கருதி

## கொரியாவுக்கு விரைவில் நேரடி விமான சேவை

### அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு




தென் கொரியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான நேரடி விமான சேவையை குறுகிய காலத்துக்குள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தென்கொரியாவில் வேலைவாய்ப்புகளுக்காக

05

## எலிக்காய்ச்சலுக்கு இணையான மேலும் ஒரு மர்ம நோய்



எலிக் காய்ச்சலுக்கு இணையான பாங்கூ எனப்படும் மிலியோய்டோசிஸ் நோய், நாட்டின் பல மாகாணங்களில் தற்போது பரவி வருவதாக இலங்கை மருத்துவ சபை தெரிவித்துள்ளது.

05



வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட பணம் நாட்டுக்கு மீளக் கொண்டு வர நடவடிக்கை வேண்டும்
சபையில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் MP உரை
03

### பிறப்பு வீதம் குறைவு, நகர்புறத்தை நாடுதல்

## வடக்கில் 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில்

### கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்கிறார் வடக்கு ஆளுநர்

*வவுனியா விசேட, ஓமந்தை விசேட நிருபர்கள்*



வடக்கில் சுமார் 194 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் பீ.எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

கனகராயன்குளம் மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு (21) உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

05

### இந்தியாவில் தலைமறைவாகியிருந்து

## நாடு திரும்பிய புலிகளின் உறுப்பினருக்கு விளக்கமறியல்

இந்தியாவில் தலைமறைவாகியிருந்தாகக் கூறப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான செல்வபாக்கியம் சுதாகரன், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் விடுத்த உத்தியோகபூர்வ அறிவித்தலின் பிரகாரம் சர்வதேச பொலிஸாரால் கைது செய்யப்பட்ட செல்வபாக்கியம் சுதாகரன்

நாடு கடத்தப்பட்டிருந்தார்.இது தொடர்பில் சட்ட மாஅதிபர் விடுத்திருந்த ஆலோசனைக்கமையவே அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட பின்னர், 90

05



யாழ். அல்லைப்பிட்டியில் மனித எலும்புக்கூடுகளின் எச்சங்கள்
வீடு கட்ட அத்திவாரம் தோண்டுகையில் அதிர்ச்சி
03



ஊடகத்துறையை மேம்படுத்த நெறிமுறைக் கோவை அவசியம்
சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கருத்து
03



24 மணி நேரத்தினுள் மூன்று துப்பாக்கிசூட்டு சம்பவங்கள்
மேல் மாகாணத்தில் 03 பேர் பலி
03

## கதிர்காமம் யாத்திரிகர் சென்ற பஸ் சம்மாந்துறையில் விபத்து

### சாரதி உட்பட 10 பேர் வைத்தியசாலையில்

*காரைதீவு றூப் நிருபர்*



கதிர்காமத்திலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த பஸ், சம்மாந்துறை வட்டிவுட்டி என்ற இடத்தில் கட்டுப்பாட்டை யிழந்து

05

## குற்றங்களை முறையிடுவதற்கு அவசர தொலைபேசி இலக்கம்

### பொலிஸ் தலைமையகம் வெளியிட்டது



பாரியளவிலான 04 குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை அறிவிப்பதற்கு அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

05

### தன்னைக் கைது செய்வதை தடுக்க

## போதகர் ஜெரோம் தனது மனுவை வாபஸ் பெற்றார்

தன்னைக் கைது செய்வதை தடுக்க உத்தரவிடக்கோரி போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல் செய்த ரிட் மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று புதன்கிழமை (21) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே, போதகர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் மனுவை வாபஸ்

05

### மதங்களை இழிவுபடுத்தி கருத்து தெரிவித்த

## நடாஷா, சத்தாரத்ன தேரரின் விளக்கமறியல் ஜூலை 05 வரை நீடிப்பு, புருனோவுக்கு பிணை



பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சமூக ஊடக செயற்பாட்டாளர் நடாஷா எதிரிசூரிய, எதிர்வரும் ஜூலை (05) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவரது பிணை கோரிக்கையை நிராகரித்த கோட்டை நீதவான் திலின கமகே, இந்த உத்தரவை பிறப்பித்தார்.

05

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும்

# அரச வருமானம் அதிகரித்திருப்பது நாட்டுக்கு கிடைத்த பாரிய வெற்றி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளமை நாட்டுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் (20) நடைபெற்ற பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகம் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

உலகின் தேசிய உற்பத்தி வருமானத்தோடு ஒப்பிடுகையில் மிக மோசமான அரச வருமானம் கொண்ட நாடாக இலங்கை குறிப்பிடப்பட்டிருந்தது. நூற்றுக்கு எட்டு வீத வருமானமும் 20 வீத செலவினமும் என்ற நிலையிலேயே காணப்பட்டது.



இந்த இடைவெளியை நிவர்த்தி செய்ய முடியாததாலேயே நாம் பெரும் நெருக்கடிகளை எதிர் நோக்க நேர்ந்தது.

தற்போது அந்த நிலை மாற்றமடைந்து அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் காணப்படுகின்றது. குறிப்பாக சுற்றுலாத்துறை, வெளிநாட்டு நிதி கையிருப்பு, அந்நிய செலாவணி போன்றவற்றில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் முன்னேற்றங்களைக் காண முடிகின்றது. இத்தகைய நிலையிலும் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடிந்துள்ளமை நாட்டுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தற்போது பல்வேறு மட்டத்திலும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. தேசிய மற்றும் சர்வதேச ரீதி என இரண்டு மட்டங்களில் இது மேற்கொள்ளப்படவுள்ளது.

சர்வதேச கடன் மறு சீரமைப்பு மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றது. பல்தரப்பு, இருதரப்பு மற்றும் வர்த்தக கடன் என இவற்றைக் குறிப்பிட முடியும்.

41 பில்லியன் டொலர்களை நாம் சர்வதேச நாடுகளுக்கு கடனாக செலுத்த வேண்டியுள்ளது.

காலம் தாழ்த்துதல், வட்டியை குறைத்துக் கொள்தல், கடனை மீள செலுத்தும் ஆரம்பத்தை ஒத்திப் போடுதல் உட்பட்ட விடயங்கள் கடன் மறுசீரமைப்போடு சம்பந்தப்படுகின்றன. எனினும் அரசாங்கம் கடனை செலுத்தாது அந்த நிதியையே தற்போது செலவிட்டு வருவதாக சில தரப்பினர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இது மிகவும் தவறானதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கான ஜப்பானிய பதில் தூதுவர் பதில் பாதுகாப்பு அமைச்சருடன் சந்திப்பு



இலங்கைக்கான ஜப்பானிய பதில் தூதுவர் கொதாரி கட்சுகி, பதில் பாதுகாப்பு அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனை (20) அமைச்சில் வைத்து சந்தித்தார்.

கொழும்பில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் இருதரப்பு பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் சுமுகமான முறையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதுள்ள நெருங்கிய உறவுகளை மேம்படுத்துவதில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்தும் இதன்போது ஆராயப்பட்டன.



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடாத்தும் (நான் மறுபடியும் ) எனும் இசை நிகழ்ச்சி (20) மாலை நிலையத்தின் ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் நடைபெற்றபோது, அல்ஹாஜ் மொஹிதீன் பேக்கின் வாரிசுகளான இசாக் பேக், முவீனா பேக் அகியோர் இணைந்து பாடல்களை பாடினர். இந்நிகழ்வின் போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் நாயகம் நளின் குமார நிஸங்க, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசீம் உமர் ஆகியோர் இணைந்து விருதுகள் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

## இரு வைத்தியர்களிடையே கைகலப்பு; ஒருவர் காயம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

அநுராதபுரம் அரச வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் இரு வைத்தியர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் காயத்திற்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடமை தொடர்பில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் நீண்டதனால் குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (19) இடம்பெற்றுள்ளது. இதன்போது ஒரு வைத்தியர் மற்றைய வைத்தியரை பலரினதும் முன்னிலையில் தாக்கியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்தது.

## நாச்சியாதீவில் 'உதவும் மனப்பாங்கை வளர்ப்போம்' மாணவர் நிகழ்வு

**திறப்பனை தினகரன் நிருபர்**



வட மத்திய மாகாண ஆரம்ப பிள்ளை பருவ கல்வி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கும் நாச்சியாதீவு அல் ஹம்ரா பாலர் பாடசாலை இம்முறை "உதவும் மனப்பாங்கை வளர்ப்போம்" என்ற தொனிப் பொருளில் சிறு வயதிலிருந்தே உதவும் மனப்பாங்கை சிறுவர் மத்தியில் உண்டாக்கும் நோக்கில், பிரதேசத்தில் இயங்கும் ஏனைய பாலர் கல்வி நிலையங்களுடன் இணைந்து ஏழாயிரம் (7000) மாத்திரை கவர்களை நாச்சியாதீவு கிராமிய வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்ட முன்மாதிரி நிகழ்வு நாச்சியாதீவில் (20) நடைபெற்றது.

வட மத்திய மாகாண ஆரம்ப பிள்ளை பருவ கல்வி வளர்ச்சி அதிகார சபை அபிவிருத்தி அதிகாரி துசாரி திசாநாயக்க தலைமையில் நாச்சியாதீவு கிராமிய வைத்தியசாலையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நாச்சியாதீவு கிராமிய வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம் இவற்றை சிறுவர்கள் வைபவரீதியாக வழங்கி வைத்தனர்.

## வியட்நாம் தூதரகத்தின் ஏற்பாட்டில் நாளை இலவச திரைப்பட ஒளிபரப்பு

**ருசைக் பாரூக்**

இலங்கையிலுள்ள வியட்நாம் தூதரகம் கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன தரங்கணி திரையரங்கில் ஏற்பாடு செய்துள்ள திரைப்படக்காட்சி நாளை (23) முதல் 25 வரை மாலை 5.00 மணி முதல் பார்வையிட முடியும். இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் Ho Thi Thanh Truc தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளார்.


இந்தத் திரைப்படங்கள் நாளை மாலை 6.00 மணிக்கும் மற்ற நாட்களில் மாலை 5.00 மணிக்கும் பொதுமக்களுக்குத் திரையிடப்படும். இதனை இலவசமாக பார்வையிட முடியும். " The Happiness of a Mother " , " Forget Me Not ", and " Dreamy Eyes " ஆகிய திரைப்படங்களே காண்பிக்கப்படவுள்ளன.



சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற போட்டி நிகழ்ச்சிகளின் பரிசளிப்பும் கண்காட்சியும் பாணந்துறை நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அநுப பஸ்குவல், பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன உள்ளிட்ட பிரமுகர்கள் மங்கள விளக்கேற்றிவைப்பதை படத்தில் காணலாம். (படம்: பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## தினகரன் பிராந்திய செய்தியாளர் ஷேக் ஹசன் காலமானார்

**(மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)**




தினகரன் பத்திரிகையின் முன்னாள் பிராந்திய செய்தியாளரும் முஸ்லிம் சஞ்சிகையின் ஆசிரியருமான ஷேக் ஹசன் இபுனு முஸ்தபா தனது 77 ஆவது வயதில் நேற்று முன்தினம் (20) இரவு காலமானார்.


இவர் பாணந்துறை, மொறட்டுவை பகுதிகளின் செய்தியாளராக நீண்டகாலம் சேவையாற்றியுள்ளதோடு, சிறிதுகாலம் சுகயீனமுற்ற நிலையில் நேற்று முன்தினம் (20 ) இரவு காலமானார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான அன்னாரின் ஜனாஸா நேற்று (21 ) மாலை பாணந்துறை ஹேனமுல்லை மஸ்ஜிதுல் முபாரக் ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# நுவரெலியா மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தோல் நோய்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**





வடமேல் மாகாணத்தில் கால்நடைகளுக்கு பரவி வரும் தோல் நோய், மத்திய மாகாணத்திலுள்ள கால்நடை வைத்திய அதிகார பிரிவுகளில் பதிவாகியுள்ளதால், அதனை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ஏனைய பிரதேசங்களுக்கு கால்நடைகளை போக்குவரத்துச் செய்வது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டத்திலிருந்து கால்நடை நோய் உத்தியோகபூர்வ பிரிவுகளில் பதிவாகியுள்ளதாக மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.எம். கே.பீ.ராஜநாயக்க தெரிவித்தார்.

தற்போது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை மற்றும் கலேவெல கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு, நுவரெலியா மாவட்டத்தில் ராகலை கால்நடை வைத்திய அதிகாரி பிரிவு, ஹரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய உடுநுவர குவாட்டல்வ ஆகிய பிரதேசங்களில் கால்நடைகளுக்கு தோல் நோய் பரவி வருகின்றமை இனங்காணப்பட்டுள்ளதாக பிரதேச கால்நடை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், இது ஒரு வைரஸ் நோய் என்பதால், நோயைக் கட்டுப்படுத்துவதற்காக பாதிக்கப்பட்ட விலங்குகளுக்கு உடனடி சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், நோய் பதிவாகியுள்ள பிரிவுகளிலிருந்து விலங்குகளை வேறு பகுதிகளுக்கு கொண்டு செல்வது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

கால்நடைகளின் முதுகில் கட்டிகள் தோன்றுவதன் மூலமும் தோல் நோய்த்தொற்றுகள் மூலமும் இந்நோயை அடையாளம் காண முடியுமெனவும், கால்நடைகள் தொடர்பில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் அருகிலுள்ள கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உடனடியாக அறிவிக்குமாறும் மாகாண பணிப்பாளர் ராஜநாயகம் விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளனர்.

# ஐ.ம.சக்தி உறுப்பினர்களும் எதிர்காலத்தில் ஜனாதிபதியுடன் இணையவுள்ளனர்

### ஆளுநர் நவீன் திஸாநாயக்க

**எம்.ஏ.அமீனுல்லா**



ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக செயற்பாடுகளால் விரக்தியடைந்த ஒரு குழுவினர் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதியுடன் இணையவுள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநராக பதவியேற்றதை தொடர்ந்து நேற்றுமுன்தினம் (20) மல்வத்து விகாரை பீடாதிபதியை சந்தித்து ஆசி பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் பதவி தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இலங்கையிலுள்ள பெரும்பாலான பிரதான அரசியல் கட்சிகளின் செயற்பாட்டாளர்கள் இருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமன்றி, சிறுபான்மை கட்சிகளின் தலைவர்களும் இந்த நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.

தற்போது தேர்தல் தொடர்பில் மக்கள் மத்தியில் ஆர்வமில்லை. அடுத்த வருடம் ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த அதிக வாய்ப்புகள் உள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் உள்ளக செயற்பாடுகளால் விரக்தியடைந்த ஒரு குழுவினர் எதிர்வரும் காலங்களில் ஜனாதிபதியுடன் இணையவுள்ளனர். தமது அரசியல் எதிர்காலம் குறித்து சிந்திக்கும் மக்கள் கட்சி பேதமின்றி ஜனாதிபதியைச் சுற்றி திரள்வதாகவும் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு கட்சியின் அரசியல் வாதிகளுக்கும் இலஞ்சம் கொடுக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்கு இல்லை.

அவர் முன்னெடுத்து வரும் வேலைத்திட்டம் தொடர்பில் பலரும் ஜனாதிபதியை தேடிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாவனல்லை ஹிங்குளோயா மஸ்ஜிதுல் ஹுதாவின் பாராட்டு விழா



மாவனல்லை ஹிங்குளோயா மஸ்ஜிதுல் ஹுதாவில் சேவையாற்றிய தலைவர்கள் மற்றும் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டும் வைபவம் அண்மையில் பள்ளிவாசலில் நடைபெற்றது.

மாவனல்லை ஹிங்குளோயா மஸ்ஜிதுல் ஹுதாவின் புதிய நிர்வாக சபை பள்ளிவாசல் ஆரம்பிக்கப்பட்டது சேவையாற்றிய தலைவர்கள், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் அனைவரும் இதன்போது பாராட்டப்பட்டனர்.

34 வருடங்களுக்குப் பிறகு தலைமைத்துவத்தில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. புதிய தலைவராக மாவனல்லை எம்.எஸ்.எம் பவாஸ் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். பொதுச் செயலாளராக மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரி உதவி அதிபர் எம்.எஸ்.எம் முனாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

ஜும்ஆத்தொழுகையின் பின்னர் பாராட்டு வைபவம் நடைபெற்றது. முன்னாள் தலைவர் டாக்டர் ஹமீட் ஏ அஸீஸ் ,சுமார் 36 வருடங்கள் இந்த மஸ்ஜிதுக்கும் ஊருக்கும் தலைமைத்துவத்தை வழங்கி சிறந்த பல மாற்றங்களைச் செய்தவர். 40 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக நிர்வாக சபையில் பல பதவிகளிலும் இருந்துள்ளார். அவரது சேவையை பாராட்டி முபாரக் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# கண்டி வாவியிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்பு

**எம்.ஏ.அமீனுல்லா**

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி வாவியிலிருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் (20) காலை கண்டி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. 31வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. மரணத்துக்கான காரணம் இதுவரை அறியப்படாத நிலையில் தற்கொலையா? கொலையா? என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அம்பிட்டிய பல்லேகம பிரதேசத்தைச் சேர்ந்த அச்சல குமாரி பண்டார என்ற 31 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இவருக்கு 5, 10 வயதுகளையுடைய இரண்டு பிள்ளைகள் இருப்பதாக தெரியவருகின்றது. கணவர் சில மாதங்களாக வெளிநாட்டில் இருப்பதாகவும் தெரியவருகின்றது. சடலம் பிரேத பரிசோதனைக்காக கண்டி தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிரேதப் பரிசோதனைக்குப் பின்னரே மரணம் குறித்து உறுதியான முடிவுக்கு வர முடியுமென பொலிஸார் தெரிவித்தனர். சடலத்தில் வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லையெனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸ் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ரசிக சம்பத் தலைமையில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜுன் 22 வியாழக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 04.33
லுஹர் - 12.14
அஸர் - 03.41
மஃரிப் - 06.29
இஷா - 07.45

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆணி 08
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# விவசாயத்தில் தொழினுட்பத்தை இணைத்து நவீனமாக்க திட்டம்

## ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய ஏற்பாடுகள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய விவசாயத்துறையில் தொழினுட்பத்தை இணைத்து ஏற்றுமதி விவசாய பொருளாதாரமொன்றை உருவாக்குவதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இதனூடாக விவசாய அமைச்சு வெளிநாட்டு வருவாயை ஈட்டும் என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

'ஸ்திரமான நாட்டுக்கு, அனைவரும் ஒரே வழிக்கு' என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் (21) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அமைச்சர் மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விவசாய தொழிற்துறைக்கு அவசியமான அனைத்து வசதிகளையும் பெற்றுக்கொடுத்தமையால் இம்முறை பெரும்போகத்தில் சிறந்த அறுவடையைப் பெற்றுக்கொள்ள முடிந்ததாகத் தெரிவித்த அமைச்சர், ஹெக்டெயார் ஒன்றில் அதிகளவான அறுவடையை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான தொழில்நுட்ப முறைமைகளை கண்டறியும் பணிகள் இடம் பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.



கடந்த காலங்களில் விவசாய நிலங்களில் இருந்து போராட்ட களத்திற்கு சென்ற விவசாயி, தற்போது மீண்டும் விவசாய நிலத்திற்கு வந்து தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்து வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் நுகர்வுத் தேவைக்காக அனைத்து விவசாயப் பொருட்களையும் வெற்றிகரமாக உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அவை விரைவில் விளைநிலங்களில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த விவசாய அமைச்சர் மஹிந்த அமவீர,

ஜனாதிபதி நாட்டை பொறுப்பேற்றுக் கொண்ட போது உர வரிசை, எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை போன்ற வரிசைகள் மாத்திரமே காணப்பட்டன. நான், விவசாய அமைச்சராக பதிவியேற்றுக்கொண்ட போதும் பாரிய சவாலொன்று காணப்பட்டது. உள்நாட்டு விவசாயிகளுக்கு உரம் வழங்கப்படவில்லை. இந்த சவாலை ஏற்றுக்கொண்டு முதற் கடமையாக விவசாயிகளுக்கு உரத்தை பெற்றுக்கொடுத்தேன். ஜனாதிபதியின் அறிவுரைக்கமைய விவசாயிகளுக்கான அனைத்து சலுகைகளையும் பெற்றுக் கொடுப்பதற்கானஏற்பாடுகள்முன்னெடுக்கப்பட்டன.

அதனால் தற்போது பெரும்போக விளைச்சல் போதியளவு கிடைத்துள்ளது. சிறுபோகத்திற்கு அவசியமான உரமும் தற்போது மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி நாட்டை பொறுப் பேற்றுக்கொண்ட போது விவசாயிகள் ஆர்ப்பாட்ட பூமியில் களமிறங்கியிருந்தனர். தற்போது விவசாயிகள் தேசிய உற்பத்திக்கு பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

சில அரசியல் தலைவர்களே விவசாயிகளை ஆர்ப்பாட்ட களத்திற்கு இழுத்தார்கள் என்பது ரகசியமல்ல. விவசாயிகளை விவசாய செயற்பாடுகளிலிருந்து விடுபடச் செய்து மக்களையும் பசியில் வாடச் செய்யும் அரசியல் சூழ்ச்சி செயற்பாடுகளையும் சிலர் முன்னெடுத்தனர்.

05

# இந்திய அரசின் நிதி உதவியுடன் காலி மாவட்டத்தில் 200 ஸ்மாட் வகுப்பறைகள்



காலி மாவட்டத்திலுள்ள 200 பாடசாலைகளில் நவீன கணனி கூடங்கள் மற்றும் ஸ்மாட் திரைகளை நிறுவும் பணிகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.இதற்கான இராஜதந்திர ஆவணங்கள் இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்கே ஆகியோருக்கிடையில் (19) பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வில் பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சர் டாக்டர் ரமேஷ் பத்திரணவும் கலந்துகொண்டார்.

05

# யாழ். அல்லைப்பிட்டியில் மனித எலும்புக்கூடுகளின் எச்சங்கள்

## வீடு கட்ட அத்திவாரம் தோண்டுகையில் அதிர்ச்சி

யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்



யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டி பகுதியில் மனித எலும்புக்கூடுகளின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன. அல்லைப்பிட்டி இரண்டாம் வட்டார பகுதியில் வீடொன்றை அமைக்க செவ்வாய்க்கிழமை (20) அத்திவாரம் வெட்டும் போது, மனித எலும்புக்கூட்டின் பாகங்கள் காணப்பட்டுள்ளன.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், அத்திவாரம் வெட்டும் வேலைகளை உடனடியாக நிறுத்தியதுடன், அப்பகுதிக்குள் எவரும் செல்லாதவாறும் தடை விதித்தனர். அவ்விடத்தில்,

தொடர்ந்தும் அகழ்வுப்பணிகளை முன்னெடுக்க நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரவும் பொலிஸார் நடவடக்கை எடுத்தனர்.ஊர்காவற்துறை நீதிமன்ற உத்தரவு கிடைத்ததும் அவ்விடத்தில் மேலதிக அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வெலே சுதா, மனைவிக்கு எதிரான வழக்கு ஆக. 04 இல்

## கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவு

ஹெரோயின் கடத்தல் மூலம் 15 கோடி ரூபாவுக்கு அதிகமான சொத்துக்கள் மற்றும் பணத்தை சம்பாதித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள சமந்தகுமார என்ற வெலே சுதா, அவரது மனைவி மற்றும் உறவினர் ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை ஆகஸ்ட் (04) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே, இந்த

05

# வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட பணத்தை நாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை வேண்டும்

## சபையில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் MP உரை

ஊழல், மோசடிகள் மூலம் வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள பணத்தை மீளக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நேற்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் நேற்று (21) கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

''பாரிய ஊழல் மற்றும் மோசடிகள் மூலம் வெளிநாடுகளின் வங்கிகளில் மறைத்து வைக்கப்பட்டுள்ள பணத்தை மீள நாட்டுக்கு கொண்டுவருவதற்கு ஊழல் தடுப்புச் சட்டத்தில் முறைமை இல்லை.



பாரியளவிலான மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம் பெறும் பட்சத்தில் அந்தப் பணம் வெளிநாட்டு வங்கிகளில் முதலீடு செய்யப்படுகின்றது.

அவ்வாறு மோசடி செய்யப்படும் பணத்தை மீண்டும் நாட்டுக்கு பெற்றுக் கொடுப்பதே முதன்மையான தேவையாகும். இதனை இலங்கை தனித்து செய்ய முடியாது.

அதற்காக சர்வதேச அமைப்புகளுடன் கைகோர்க்க வேண்டும். ஊழல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

05

# ஊடகத்துறையை மேம்படுத்த நெறிமுறைக் கோவை அவசியம்

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் கருத்து

லோரன்ஸ் செல்வநாயகம்



சுதந்திர ஊடகத் துறையை மேம்படுத்த நெறிமுறைக் கோவையொன்றை அறிமுகப்படுத்த வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கருத்து வெளியிட்டுள்ளார்.

இலத்திரனியல் ஊடகங்களை ஒழுங்குப்படுத்தும் சட்டமூலம் தொடர்பாக நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், “இலத்திரனியல் ஊடகங்களை ஒழுங்குப் படுத்த சட்டமொன்று அவசியம் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஆனால், இந்த ஒழுங்குபடுத்தல் நெறிமுறைகள் என்பது ஊடக நிறுவனங்களிடம்தான் காணப்பட வேண்டுமே ஒழிய, அரசாங்கத்திடம் இருக்கக்கூடாது.

இவ்வாறான சட்டங்கள் நாட்டுக்கு அவசியம் என்றாலும், இதன் அதிகாரங்கள் ஊடக நிறுவனங்களிடம்தான் இருக்க வேண்டும்.

ஊடகவியலாளர்களின் பங்கு பற்றலுடன்தான், இந்த செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். இது சுய ஒழுங்குப்படுத்தல் செயற்பாடாக இருப்பது அவசியம் .

அரசாங்கத்திடம் இந்த அதிகாரம் சென்றால், அரசாங்கத்தை

05



# துப்பாக்கி தயாரிக்கப்படும் வீடியோக்கள் யூடியூப்பில்

## பதிவிட்ட இருவர் பதுரலியில் கைது

துப்பாக்கிகள் தயாரிக்கப்படும் வீடியோக்களை யூடியூபில் பதிவிட்ட இருவரை, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் (19) கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து

இரண்டு துப்பாக்கிகள் மற்றும் அவற்றைத் தயாரிக்க பயன்படுத்திய உபகரணங்களும் மீட்கப்பட்டன.

சந்தேக நபர்களிடமிருந்து T56 ரக துப்பாக்கி, 05 அடி நீளமான வேறு ரக துப்பாக்கி, ரவைகள், துப்பாக்கி தயாரிக்க பயன்படுத்தப்படும் இரண்டு

05

# தங்கத்தின் விலையில் மேலும் வீழ்ச்சி நிலை

## 24 கரட் பவுண் 1,65,000 ஆக பதிவு

கொழும்பு செட்டியார்தெரு நிலவரங்களின் படி நேற்று தங்கத்தின் விலை மேலும் குறைவடைந்துள்ளது. அண்மையில், டொலர் பெறுமதி அதிகரித்து வந்ததையடுத்து தங்கத்தின் விலையும் அதிகரித்தது. 22 கரட் தங்கத்தின் விலை 1,60,000 ரூபா என்ற நிலையை எட்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தங்கத்தின் விலையில் வீழ்ச்சி பதிவாகி வருகிறது. நேற்றைய தினம் 22 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 1,52,600 ரூபாவாக காணப்பட்டது. அதே நேரம் 24 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 1,65,000 ரூபாவாக பதிவாகியது. இந்நிலையில் நேற்று 22 கரட் தங்கப் பவுணொன்றின் விலை மேலும் குறைந்து 1,50,800 ரூபாவாக பதிவாகியது. 24 கரட் தங்கப் பவுணொன்றின் விலை 1,63,000 ரூபாவாக காணப்படுகிறது.

ஏற்கனவே, தங்க விலை 1,46,000 ரூபா வரையில் குறைந்த வேளை, இன்னும் குறையுமென சிலர் காத்திருந்தனர்.

# 24 மணி நேரத்தினுள் மூன்று துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள்

## மேல் மாகாணத்தில் 03 பேர் பலி



மேல் மாகாணத்தில் கடந்த 24 மணிநேரத்திற்குள் மூன்று துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவை, வெவ்வேறு இடங்களான கொஸ்கொட, கொட்டாவ மற்றும் ஹோமாகம பகுதிகளில் இடம் பெற்றுள்ளன.

கொஸ்கொட, ஹிந்தகல பகுதியில் (21) அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்ததாக கொஸ்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

இத்துப்பாக்கிச் சூட்டில் பாதாள உலகத் தலைவர் கொஸ்கொட சுஜீயின் நெருங்கிய உறவினரான கொஸ்கொட ரன் என்பவரே உயிரிழந்தார்.

அவர் வீட்டிலிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர், துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கொட்டாவ, தர்மபால வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில், ஒருவர்

05






# பெருந்தோட்ட கம்பனிகளுக்கான காலம் மேலும் நீடிக்கப்படும்

## வருமான – செலவீன அடிப்படையிலேயே சம்பளம் தீர்மானிப்பு

அருள் சத்தியநாதன்

பெருந்தோட்ட கம்பனிகளின் குத்தகைக் காலம் நீட்டித் தரப்படும் என்றும் சிறு தோட்டங்களில் காணப்படும் சுகாதார குறைபாடுகள் விரைவிலேயே நிவர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பதிரன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு தேயிலைச் சபை கூடுவோர் அரங்கில் ஒழுங்கு

05

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.29 | 215.00 |
| கனடியன் டொலர் | 224.47 | 239.42 |
| யூரோ | 324.45 | 344.53 |
| ஜப்பான் யென் | 2.1010 | 2.2276 |
| சிங்கப்பூர் டொலர் | 220.86 | 235.11 |
| ஸ்டேர்லிங் பவுன் | 379.69 | 402.23 |
| சுவிஸ் பிராங்க் | 329.51 | 352.41 |
| அமெரிக்க டொலர் | 298.47 | 314.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 811.99 | கட்டார் ரியால் | 84.04 |
| குவைத் டினார் | 996.76 | சவூதி ரியால் | 81.61 |
| ஓமான் ரியால் | 795.16 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 83.34 |

# சோழர் காலத்து தீர்த்த கிணற்றிலிருந்து சாவகச்சேரி மக்களுக்கு குடிநீர்

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



யாழ். சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் காணப்படும் நல்ல தண்ணீர் கிணற்றை சுத்திகரித்து அப்பிரதேச மக்களுக்கும் பயணிகளுக்கும் குடிநீர் வழங்குவது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனம் செலுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (20) அப்பிரதேசத்துக்கு அமைச்சர் சென்று நிலைமைகளை நேரடியாக ஆராய்ந்ததுடன், சம்மந்தப்பட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரிகளையும் அமைச்சர் வரவழைத்து இது தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

இந்த நல்ல தண்ணீர் கிணறு, சோழர்களால் அமைக்கப்பட்ட சிவன் கோயிலின் மூலஸ்தானத்துக்கான தீர்த்தக் கிணறென ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையால், தொல்லியல் திணைக்களத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸுடனான சந்திப்பின் போது, நல்ல தண்ணீர் கிணற்றின் கட்டுமானங்களில் பாதிப்பை ஏற்படுத்தாமல் மக்களுக்கு குடிநீரை வழங்குவதற்கு தொல்லியல் திணைக்களத்தினர் சம்மதம் தெரிவித்துள்ளனர். தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (யாழ்ப்பாணம்) பந்துல ஜீவ, புனர்நிர்மாணப் பொறுப்பதிகாரி ராகினி, மேலாய்வு உத்தியோகத்தர் தஷிந்தன் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட மூவருக்கு பிணை

**மாங்குளம் குறூப் நிருபர்**

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 4 கடற்றொழிலாளர்களை தலா இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப்பிணையில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

அத்துடன், இந்த வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த திங்கள் (19) கடற்படையினர் சுற்றிவளைப்பு நடத்திய போது, சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 3 படகுகள், வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடிப்பதற்கான உபகரணங்களுடன் 4 கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட உபகரணங்களுடன் இவர்கள் 4 பேரையும் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, இவர்களை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (20) முன்னிலைப்படுத்திய போதே, இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

# குறிகட்டுவான் – நெடுந்தீவு குமுதினி படகு சேவையை மீண்டும் ஆரம்பிக்க ஏற்பாடுகள்

**யாழ். விசேட நிருபர்**



யாழ். குறிகாட்டுவான் பிரதேசத்துக்கும் நெடுந்தீவு பிரதேசத்துக்குமிடையில் சேவையில் ஈடுபட்டு வந்த குமுதினி படகு பழுதடைந்து, அதன் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதை தொடர்ந்து, மீண்டும் அப்படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

குமுதினி படகு கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பழுதடைந்த போது, இதன் திருத்த வேலைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் முன்னெடுக்கப்பட்டது.

இப்படகின் திருத்த வேலைகள் பூர்த்தியடைந்ததை தொடர்ந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (20) படகை கடலுக்குள் இறக்குவதற்கு முன்னர், பாரம்பரிய முறைப்படி பொங்கல் பொங்கிப் படைத்து, படகு கடலில் இறக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை கடற்பிரதேசத்தில் இரண்டு நாட்கள் படகு தரித்து வைக்கப்பட்டு, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் கடல் போக்குவரத்து தொடர்பான அதிகாரிகள், படகின் தரம் மற்றும் திருத்த வேலைகளை ஆராய்ந்து, பயணிகள் சேவைக்கு அனுமதி வழங்கிய பின்னர் மீண்டும் குமுதினி படகு சேவையில் ஈடுபடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமுதினி படகு 1968ஆம் ஆண்டு முதல் குறிகட்டுவானுக்கும் நெடுந்தீவுக்குமிடையில் சேவையில் ஈடுபட்டு வருவதுடன், இப்படகு பல தடவைகள் பழுதடைந்த போதிலும், படகை திருத்தி சேவை முன்னெடுக்கப்படுகின்றது.


WP/TA/HO/ADM/74/2023/19-89

**வீதிப் பயணப் போக்குவரத்து அதிகார சபை (மேல் மாகாணம்)**

**விலைமனு கோரல்**

**பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட வேன் வண்டியை விற்பனை செய்தல்**

இந்த அதிகார சபையில் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட 53-3850 இலக்க வேன் வண்டியை விற்பனை செய்வதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வகை / மாதிரி | இயந்திர கொள்ளளவு | உற்பத்தி வருடம் | ஆகக் குறைந்த விலைக்கோரல் தொகை |
|---|---|---|---|
| MITSUBISHI L-300 | 2500 cc | 1992 | 600,000.00 |

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2023 ஜுலை மாதம் 14ஆம் திகதியாகும் என்பதுடன் பெறுகைக்கு இயைபான விலைக்கோரல் நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை www.rpta.wp.gov.lk→Downloads→Tenders எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதிப் பயணப் போக்குவரத்து அதிகாரசபை (மே.மா),**
**இல. 89, ''ரன்மகபாய'', கடுவளை வீதி, பத்தரமுல்ல.**
**திகதி: 2023-06-22**

**தொ.பே. 011-2877421**



**மாநகர சபை - குருநாகல்**

**ஆர்வத்தை கோரல் அறிவித்தல்**

**திருத்தம்**

குருநாகல் மாநகர சபை, புதிய மத்தியசந்தை கடைத் தொகுதியில் நிர்மாணிக்கப்படும் கடை அறைகள் வியாபாரஸ்தலம் மற்றும் வீடமைப்புத் தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து ஆர்வத்தை கோரல் பற்றி 2023.05.24ம் திகதி பத்திரிகை அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டுள்ள காலம் 2023 ஜுலை 14 பி.ப. 2.00 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துக் கொள்கிறேன்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**குருநாகல்.**
2023.06.22



**மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை**

**மக்கள் வங்கி - மாத்தளை பிராந்திய தலைமைக் காரியாலயம்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கி மாத்தளை பிராந்திய தலைமைக் காரியாலயத்தின் கிளைகள்/ சேவை மையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ள 21.07.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ் காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடக்கி ஏலத்தில் விற்கப்படும்.

| ஏல விற்பனை நிகழும் திகதி | 22.07.2023 மற்றும் 23.07.2023 | 22.07.2023 மற்றும் 23.07.2023 |
|---|---|---|
| ஏல விற்பனை நிகழும் இடம் | மாத்தளை கிளை வளாகம் | தம்புள்ளை கிளை வாளாகம் |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | மாத்தளை, உக்குவெல, ரத்தோட்ட, பல்லேபொல | தம்புள்ளை, நாவுல, கலேவெல, வில்கமுவ |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் | திருகோணமலை வீதி, கொங்காவெல, வறகாமுறை, கைகாவல, யடவத்த, லங்கா பீங்கான் பிரிவு | இனாமலுவ, மடாட்டுகம, மடவல, உல்பொத்த, தெவஹுவ, லக்கல, பல்லேகம |

இந்த ஏலங்களை மறுஅறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி, பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**மாத்தளை.**

**தொலைபேசி இல. 066-2234212**
**066-2222032**

www.peoplesbank.lk PEOPLE'S BANK Pride of the Nation



WP/TA/HO/ADM/74/2023/07-88

**வீதிப் பயணப் போக்குவரத்து அதிகார சபை (மேல் மாகாணம்)**

**விலைமனு கோரல்**

**கொட்டாவ மற்றும் நாவின்ன பஸ் நிலையங்களின் மலசலகூட முறைமைகளை 02 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குதல்**

இந்த அதிகார சபைக்குச் சொந்தமான கொட்டாவ மற்றும் நாவின்ன பஸ் நிலையங்களின் மலசலகூடங்களை 02 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2023 ஜுலை மாதம் 14ஆம் திகதியாகும் என்பதுடன் பெறுகைக்கு இயைபான விலைக்கோரல் நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை www.rpta.wp.gov.lk→Downloads→Tenders எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வீதிப் பயணப் போக்குவரத்து அதிகாரசபை (மே.மா),**
**இல. 89, ''ரன்மகபாய'', கடுவளை வீதி, பத்தரமுல்ல.**
திகதி: 2023-06-22

தொ.பே. **011-2877421 / 011-2868614**


## அமைச்சர் டக்ளஸ் முன்னிலையில்

# யாழ். வடமராட்சி நீர்நிலைகளில் இடப்பட்ட திலாப்பியா மீன்குஞ்சுகள்

**நாகர்கோவில் விசேட நிருபர்**



யாழ். வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனை, நாகர்கோவில் பிரதேசத்திலுள்ள களப்பு நீர் நிலைகளில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திலாப்பியா மீன் குஞ்சுகள் நேற்று புதன்கிழமை (21) விடப்பட்டன.

கடற்றொழில் சார்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் நீர் வேளாண்மை விருத்தி தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனம் செலுத்தி வரும் நிலையில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நிர்வாகப் பொறுப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரனும் கலந்து கொண்டார்.


**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA)**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

| இல. | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| 1 | அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்கு 110 எண்ணிக்கையான GPS கண்காணிப்பு சாதனங்கள் (GPS Tracking Devices) கொள்வனவு செய்தல் (விலைமனு இல. RDA/EOM&M/PRC/2023/TRA/05) |
| 2 | தெற்கு அதிவேக நெடுஞ்சாலைக்கு 03 எண்ணிக்கையான போட்டோப் பிரதி இயந்திரங்களை கொள்வனவு செய்தல். (விலைமனு இல. RDA/EOM&M/PRC/2023/IT/14) |

தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் மேற்படி பெறுகைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023.06.22 முதல் 2023.07.13 வரை RDA மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளப் பக்க www.rda.gov.lk ஐப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



**பெறுகை அறிவித்தல்**

**இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவனம்**

**(கைத்தொழில் அமைச்சு)**

**ஆய்வுகூட மெசின்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகை**

**இல - SLITA/MEL/01/2023**

01. ஆய்வுகூட மெசீன்கள் மற்றும் உபகரணங்களை வழங்கி விநியோகிப்பதற்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனு தாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை புடைவைகள் மற்றும் ஆடைகள் நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்
02. ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 2023 ஜுன் 22 முதல் 2023 ஜுலை 05 வரை வார நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.30 வரை கீழே தரப்பட்டுள்ள முகவரியில் உள்ள இலங்கை புடைவை மற்றும் ஆடைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் (செயற்பாடுகள்) இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. தேசிய பெறுகை முகவரகத்தினால் வெளியிடப்படும் தேசிய போட்டி விலைமனு முறைமையின் கீழ் விலைமனுக்கள் நடத்தப்படும்.
04. ஆங்கில மொழியிலான ஒரு முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை எமது இணையத்தளம் www.slita.lk மூலம் விலைமனுதாரர்களால் பெற்றுக்கொள்ள முடியும். (வன்பொருட் பிரதிகள் விநியோகிக்கப்பட மாட்டாது)
05. 2023 ஜுன் 22 முதல் 2023 ஜுலை 05 வரை வார நாட்களில் (விடுமுறைகள் தவிர்த்து) மு.ப.9.00 முதல் பி.ப.4.00 வரை கணக்குப் பிரிவிற்கு காசாக கீழே தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்த முடியும். அல்லது இலங்கை புடைவை மற்றும் துணிகள் நிறுவனத்திற்கு இலங்கை வங்கி இரத்மலானை கிளையில் கணக்கு இலக்கம் 9521019 இற்கு செலுத்துதல் வேண்டும். (குறிப்பு : வைப்பாளரின் விபரம் மற்றும் காசு வைப்புப் பற்றுச்சீட்டில் வைப்புச் செய்வதன் நோக்கம் மற்றும் கட்டண பற்றுச்சீட்டை விலைமனு ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்)

| உபகரணத்தின் விபரம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூ) | விலைமனுப் பிணை |
|---|---|---|
| Colour Fastness to Light Tester | 4,000/- | 300,000/- |
| Washing Machine | 2,500/- | 100,000/- |
| Colour Fastness to Light Tester & Washing Machine | 6,500/- | 400,000/- |

06. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2023 ஜுன் 28ம் திகதி மு.ப.10.00 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நடைபெறும்.
07. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடப்படல் வேண்டும் அல்லது 2023 ஜுலை 05ம் திகதி பி.ப.2.30க்கு அல்லது அதற்கு முன்பு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் விலைமனுக்கள் 2023 ஜுலை 05ம் திகதி கீழேயுள்ள முகவரியில் விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும் அத்துடன் எல்லா விலைமனுவுடனும் மேற்படி அட்டவணையின் பிரகாரம் ஓர் விலைமனுப்பிணை இணைக்கப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை புடைவை மற்றும் துணிகள் நிறுவனம்**
**கந்தவல எஸ்டேட் இல -02**
**ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல ரோட், இரத்மலானை**
**தொ.பே 0112632406 பெக்ஸ் : 0112636337**
**இணையத்தளம் : www.slita.lk**


# யாழ்ப்பாணத்தில் யோகா தினம்



யாழ். விசேட, பருத்தித்துறை விசேட, யாழ்ப்பாண குறூப் நிருபர்கள்

ஒன்பதாவது சர்வதேச யோகா தினம், யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தில் யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.

இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் இந்நிகழ்வை ஆரம்பித்து வைத்ததுடன், இந்நிகழ்வுக்கு வருகை தந்த பலர், யோகா பயிற்சியிலும் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறீசற்குணராஜா, வடமாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ்ப்பாண படைகளின் கட்டளைத் தளபதி ஹெட்டியாராச்சி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் 21ஆம் திகதி சர்வதேச யோகா தினமாக ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கடந்த 2014ஆம் ஆண்டில் நிறைவேற்றியதை தொடர்ந்து சர்வதேச யோகா தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**

**Agriculture Sector Modernization Project**

**IDA Credit No: 5873 LK**

**PROCUREMENT NOTICE**

**Hiring Vehicle to Agriculture Sector Modernization Project Eastern Province Office, Kallady, Batticaloa.**

Sealed bids are invited to supply under mentioned category of vehicle on full time hire basis for Agriculture Sector Modernization Project, Eastern Province Office, Kallady, Batticaloa for a period of one year.

| Vehicle Type | Year of Manufacture | No. of Vehicles | Seating Capacity | Minimum Monthly Mileage (Km) |
|---|---|---|---|---|
| Van (Dual A/C) | 2013 or Later | One (01) | 10 | 2000 |

*For Further Details please refer Bidding Document.

Bidding Documents can be obtained from Agriculture Sector Modernization Project, Eastern Province Office, Agriculture Quarters Lane, Kallady, Batticaloa on a payment of a non-refundable fee of Rs. 2,000.00. Sealed bids should be submitted at or before **10.00 a.m.** of the bid closing date of **06th July 2023.**

**Chairman,**
**Project Procurement Committee (Minor),**
**Agriculture Sector Modernization Project,Eastern Province**
**Agriculture Quarters Lane, Kallady, Batticaloa**
**Tel: 077-3574664 / Fax: 065-2059190**
Date: 22.06.2023


# கனகராயன்குளம் பாடசாலையில் நூற்றாண்டுவிழா கொண்டாட்டம்

**ஓமந்தை விசேட நிருபர்**



வவுனியா மாவட்டத்திலுள்ள கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவின் முதல் நாள் நிகழ்வு நேற்று புதன்கிழமை (21) சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது, பாடசாலை நுழைவாயில் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டதை தொடர்ந்து, பாடசாலை வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை, பண்டாரவன்னியன் சிலை, அப்துல்கலாம் சிலை ஆகியனவும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் குலேந்திரகுமார் தலைமையில் ஆரம்பமாகிய இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் கலந்துகொண்டார்.

## இந்திய அரசின் நிதி உதவி... (03 ஆம் பக்கத் தொடர்)

அத்துடன் பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப், இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

## வெளிநாடுகளில் பதுக்கப்பட்ட... (03 ஆம் பக்கத் தொடர்)

அந்தச் சட்டத்துக்குத் தேவையான பலத்தை அளிக்கும் வகையில், சர்வதேச நிறுவனங்களின் ஆதரவைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் சேர்க்க வேண்டும்." என ஜி.எல்.பீரிஸ் வலியுறுத்தியுள்ளார்.

## வெலே சுதா, மனைவிக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்காக அடுத்த நீதிமன்ற தினத்தன்று, ஆஜராகுமாறு அரச தரப்பு சாட்சிகள் ஆறு பேருக்கு அழைப்பாணை அனுப்பவும் உயர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## துப்பாக்கி தயாரிக்கப்படும்... (03 ஆம் பக்கத் தொடர்)

கிரனைட்டர்கள் மற்றும் கிறில் ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிகளை பயன்படுத்த சந்தேக நபர்கள் ஏதேனும் குற்றச்செயலில் ஈடுபட்டுள்ளார்களா? என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பதுரலிய, சீலதொல பிரதேசத்தைச் சேர்ந்த 41 மற்றும் 21 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

## ஊடகத்துறையை மேம்படுத்த... (03 ஆம் பக்கத் தொடர்)

விமர்சிக்கும் ஊடகங்கள் பாதிக்கப்படக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது. இது சுதந்திர ஊடகத்தை கட்டுப்படுத்தும் வகையில் அமைந்துவிடும். மேலும், ஜனநாயகத்துக்கும் இது பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

சுதந்திர ஊடகத் துறையை மேம்படுத்த நெறிமுறைக் கோவையொன்றை அறிமுகப்படுத்த வேண்டும். ஊடகவியலாளர்களுக்கு சுய ஒழுங்குறுத்தல் ஒன்றை கொண்டுவருவது தான் சிறப்பாக அமையும். இலத்திரனியல் ஊடகங்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கை ஊடாக, அரசாங்கம் அடக்குமுறையை மேற்கொள்ள முற்படுகிறதா? என்ற கேள்வியும் எழுகிறது.

இவ்விடயம் தொடர்பாக அனைத்து தரப்புடனும் கலந்துரையாடி ஒரு நவீன ஊடக கலாசாரத்தை ஏற்படுத்துவோம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## 24 மணி நேரத்தினுள் மூன்று... (03 ஆம் பக்கத் தொடர்)

உயிரிழந்ததாக கொட்டாவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் மத்தேகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடையவரென தெரிய வந்துள்ளது.

இதேவேளை, ஹோமாகம, மஹா கட்டுவன பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்தார்.

ஹோமாகம மஹா கட்டுவன பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய வரே உயிரிழந்தவராவார்.கடந்த (20)

இரவு 08 மணியளவில், தனது வீட்டின் முன் தொலைபேசி அழைப்பிலிருந்தபோது, காரில் வந்த நபர் ஒருவர் T56 ரக துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பிச் சென்ற தாக பொலிஸார் தெரிவித்தனர்.

# திக்குவல்லையில் சைக்கிள் ஓட்டப்போட்டியும் கலை நிகழ்வும்

திக்குவல்லை அல் மின்ஹாத் பழைய மாணவர் (சாதாரண தரம் 1991 குரூப்) சங்கத்தினர், எதிர்வரும் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று ஊர் போட்டியாளர்கள் பங்குபற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டியை நடத்தவுள்ளனர்.

வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பு விழா 29 ஆம் திகதி மாலை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை வானொலி சஞ்சாரம் புகழ் திக்குவல்லை சப்வான் குழுவினரின் மேடை நாடகமும் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் 'இசைமுரசு' இஸ்லாமிய கீதப் பாடல்களும் இடம்பெறவிருக்கின்றன. திக்குவல்லை நியு லங்கா பெய்ன்ட் நிறுவனத்தினர் அனுசரணை வழங்குகின்றனர்.

## விவசாயத்தில் தொழினுட்பத்தை... (03 ஆம் பக்கத் தொடர்)

அந்த சவாலுக்கும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் சாதகமான முறையில் முகம்கொடுத்தது.

ஜனாதிபதியின் விவசாய நவீனமயப்படுத்தல் வேலைத் திட்டத்தின் கீழ் ஹெக்டெயார் ஒன்றில் பெற்றுக்கொள்ளக்கூடிய

அறுவடையின் தொகையை அதிகரித்துக்கொள்ள முடிந்துள்ளது. சில விவசாயிகள் குறிப்பிட்ட பருவகாலங்களில் 11 ஆயிரம் கிலோவை அறுவடை செய்துள்ளதோடு மரக்கறி மற்றும் பழங்கள் உற்பத்திச் செயற்பாடுகளிலும் புதிய தொழில்நுட்பத்தை உள்ளீடு செய்வதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இதன்கீழ் இலங்கை மக்களின் உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டக்கூடிய வலுவான திட்டமிடல் ஒன்றை தயாரிக்க எதிர்பார்த்திருப்பதாகவும் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டக்கூடிய விவசாய அமைச்சு ஒன்றை உருவாக்குவதே தமது நோக்கம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# தமிழர் பாரம்பரிய கலைத் திருவிழா

(ப. துஷியந்தி)

உலகத் தமிழ் கலை மற்றும் பண்பாட்டு அகாடமி நடத்தும் மாபெரும் தமிழர் பாரம்பரிய கலைத் திருவிழா மற்றும் பொருநைமைந்தன் ஹாஜி N.காஜா முஹைதீன் எழுதிய தமிழ் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (25.06.2023) மாலை 04.00 மணிக்கு கோஃஸ்வரன் நகர், பேட்டைரோடு, திருநெல்வேலி டவுனில் தமிழ்நாடு லிட்டில் 'ஃபிளவர் மாடர்ன் ஸ்கூலில் நடைபெறவுள்ளது.

சட்டமன்ற சபாநாயகர் மு.அப்பாவு அய்யா தலைமையேற்க தொழிலதிபர் ஹாஜி நெல்லை சு.ஆ.நிஹ்மத்துல்லா, பிரேமசந்திரன் முகம்மது ரபிக் ஆனு. திருமதி அல்ஜைனப் பாத்திமா தொழிலதிபர் பிரகாஷ் தொழிலதிபர் குமார் முன்னிலையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கான வரவேற்புரையை உலக தமிழ்க்கலை பண்பாட்டு அகாடமி அகில இந்திய ஒருங்கிணைப்பாளர் கலைச்சுடர்மணி முனைவர் நெல்லை அபுபக்கர் நிகழ்த்துவுள்ளார். இந்நிகழ்விற்கான வாழ்த்துரை முன்னாள் அமைச்சரும் தற்போதைய சட்டமன்ற உறுப்பினருமான நயினார் நாகேந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம் போன்றோர் நிகழ்த்தவுள்ளனர். மேலும் இந்நிகழ்விற்கான நன்றியுரையை உலக தமிழ் கலை பண்பாட்டு அகாடமி நிறுவுனர் சர்வதேச தலைவர் சேவரத்னா முனைவர் எஸ்.எம்.ரஸ்மி ரூமி நகழ்த்தவுள்ளார். இந்நிகழ்வானது முனைவர் தமிழ்ச்செல்வத்தினால் தொகுத்து வழங்கப்படவுள்ளது.

## நாடு திரும்பிய புலிகளின்...

நாட்கள் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தியதாக பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

படையினருக்கு தகவல்களை வழங்கிய நபர்களை படுகொலை செய்தல் உள்ளிட்டவை இந்த சந்தேகநபர் உள்ளிட்ட குழுவினரால் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான திட்டங்களை இக்குழுவினரே தீட்டியதாகவும் விசாரணைகளில் தெரியவந்ததையும் நீதிமன்றத்தின் கவனத்துக்கு விசாரணைப் பிரிவினர் கொண்டுவந்தனர்.

மூதூர் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட மேற்படி நபர், 2019 ஆம் ஆண்டு நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாண பிரபல தலைவரான "இலங்கீத் மாஸ்டர்" என்பவருடனேயே இவர் தப்பிச் சென்றதாக விசாரணைகளில் உறுதியாகியுள்ளது. இவ்விருவரும் நாட்டுக்குள் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நிதி சேகரித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தாகவும் நீதிமன்றத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## கதிர்காமம் யாத்திரிகர் சென்ற...

வாய்க்காலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இந்த பஸ்வண்டி,(21) புதன்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் விபத்துக்குள்ளானது.

கதிர்காமத்திலிருந்து இரவு பத்து மணியளவில் புறப்பட்டு சம்மாந்துறை வழியினூடாக மட்டக்களப்பு நோக்கி சென்று கொண்டிருந்த பஸ்ஸே, வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியது.

விபத்தில் சாரதி உட்பட 10 பேர் சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## குற்றங்களை முறையிடுவதற்கு...

பொலிஸ் தலைமையகம் இவ்விலகத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, 1997 இலக்கமூடாக முறைப்பாடுகளை அறிவிக்க முடியுமென பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது. போதைப்பொருள் குற்றங்கள், திட்டமிடப்பட்ட குற்றங்கள், பாரியளவிலான சுற்றுச் சூழல் அழிப்பு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் இடம்பெறும் பகிடிவதைகள் பற்றிய தகவல்களை இந்த அவசர தொலைபேசி இலக்கத்தில் தெரிவிக்கலாம்.

## போதகர் ஜெரோம் தனது...

பெற அனுமதி கோரினர். இதன்படி, மனுவை வாபஸ் பெற நீதிமன்றம் அனுமதியளித்தது. போதகர் ஜெரோமுக்கு எதிராக பணச்சலவை தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்பட்டுவருவதால், இந்த மனுவை விசாரணை செய்யாமலேயே தள்ளுபடி செய்யுமாறு அரச சட்டத்தரணி ஷமிந்த விக்கிரம மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

## நடாஷா, சத்தாரத்ன தேரரின்...

அத்துடன் யூடியூபில் தனது அறிக்கையை வெளியிட்ட புருனோ திவாகரவை, தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப்பிணை மற்றும் 50,000 ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்குமாறும் கோட்டை நீதவான் திலின கமகே நேற்று உத்தரவிட்டார்.

## கிழக்கு, மலையகத்தில்...

விஜயம் செய்துள்ளார். ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள ஆளுநர் செந்தில் தொண்டமான், இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளின் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தல் மற்றும் இரு தரப்பு சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் குறித்தும் கலந்துரையாடினார். ஜப்பானிலுள்ள மியாசாகி கடற்கரை போன்று கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள உலகத் தரம் வாய்ந்த சுற்றுலா தளங்களில் ஒன்றான அறுகம்பே கடற்கரையை, ஊக்குவிக்கத் தேவையான நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார்.

## தொழிற்சங்க பிரதிநிதிகளுடன்...

தொடர்பாக எடுத்துவரும் நடவடிக்கைகள் மற்றும் இவற்றுக்கு முகம் கொடுப்பது எவ்வாறு என்பது போன்ற விடயங்களை நாமல் எம்பியுடன் கலந்துரையாடினர்.

இங்கு நாமல் ராஜபக்ச தெரிவிக்கையில், இவ்வாறு தனியார்மயப்படுத்தல் மற்றும் விற்பனை செய்வது என்றால் அதற்கு காரணம் உண்மையில் அந்த நிறுவனங்கள் நட்டம் அடைந்துள்ளனவா? இந்த நிறுவனங்கள் எவ்வளவு காலமாக நட்டத்தில் இயங்குகின்றன? இல்லாவிட்டால் நல்லிணக்க ஆட்சி காலத்திலா? தனியார்மப்படுத்தல் அல்லது விற்பனையை மேற்கொள்வதாயின் அதனை மேற்கொள்வது வெளிப்படை தன்மையுடனா? தனியார்மயப்படுத்தல் அல்லது விற்பனை செய்யும் போது ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் அனுகூலங்கள் என்ன? அவர்களை வேலையிலிருந்து நீக்குவதாயின் அவர்களுக்கு சரியான முறையில் நட்ட ஈடு மற்றும் கொடுப்பனவுகள் கிடைக்குமா? போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## கொரியாவுக்கு விரைவில்...

செல்பவா்களை அழைத்துச் செல்ல பயன்படுத்தப்படும் விமானங்கள், தொடர்ந்து தாமதமாகி வருவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். தென் கொரியாவுக்கும் இலங்கைக்குமிடையே நேரடி விமான சேவை தொடங்கும் வரை, இவர்களை சிங்கப்பூர் வழியாக தென் கொரியாவுக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

## எலிக்காய்ச்சலுக்கு...

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட இலங்கை மருத்துவ சபையின் தலைவர் இனோகா கொரயாவே, இதனைத் தெரிவித்துள்ளார்.

## வடக்கில் 194 பாடசாலைகள்...

அவர் மேலும் தெரிவித்ததாவது, வெற்றிடம் என்ற விடயம் கனகராயன்குளம் மகாவித்தியாலத்துக்கு மட்டுமான பிரச்சினை இல்லை. வடக்கு, கிழக்கில் பல இடங்களிலும் காணப்படுகின்ற ஒரு பிரச்சனையாகும். வடக்கை பொறுத்தவரை சுமார் 194 பாடசாலைகள் மாணவர்கள் இல்லாமையினால் மூடப்பட்டுள்ளன . இதற்கு காரணம் கிராமப்புறங்களிலிருந்து நகரங்களை நோக்கி மாணவர்கள் நகரத் தொடங்கியமையும், பிறப்பு வீதம் குறைந்து செல்வதுமே ஆகும். இதே நிலை மட்டக்களப்பில் 07 வருடங்கள் அரச அதிபராக கடமையாற்றும் போதும் ஏற்பட்டது. இதற்கும் காரணமாக பிறப்பு வீதம் குறைவடைந்து வருகின்றமையும் ஒன்று. முதலாம் வகுப்பில் மாணவர்களை அனுமதிப்பதில் சில பாடசாலைகளில் பூச்சிய மட்டம் காணப்படுகிறது.இதுவும் பாரிய பிரச்சினை என, பிரதேச செயலாளர்கள் அப்போது தெரிவித்தனர்.

எனவே, இந்த விடயங்கள் புலம்பெயர்ந்த சமூகத்தினாலும் இங்கே வாழும் சமூகத்தினாலும் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். நாங்கள் வாழ வைக்க வேண்டும் என எண்ணுகின்ற எங்களது சமூகம், இந்த பிரதேசம் எதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது என்பதை உணர வேண்டும். சமூகத்தை வாழவைக்கும் வழிவகைகளை செய்கின்றவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். இதேவேளை, சில விடயங்களின் புள்ளிவிபரங்கள் இச்சமூகத்திலே அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக விவாகரத்து அதிகரித்தல், குழந்தை பேறு குறைவடைந்தமை, வயது சென்ற திருமணங்கள் மற்றும் குடிபோதை, போதைவஸ்து, போன்ற பல்வேறு சமூக பிரச்சினைகள் அதிகரித்து காணப்படுகின்றன. எனவே இவற்றை எல்லாம் கடந்து இச் சமூகம் வாழ வேண்டும் என்றால் புலம்பெயர்ந்த சமூகம் ஆற்ற வேண்டிய பணி நிறையவே இருக்கின்றன.இதை, இங்கே கூடியுள்ள புலம்பெயர் சமூகங்களும், உள்ளூர் சமூகங்களும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

## இரண்டாவது ஓடுதளத்தின்...

வங்குரோத்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டதால், ஜப்பான் ஜெய்கா நிறுவனத்தால் இந்த இரண்டாவது ஓடுதளத்தை நிர்மாணிக்க வழங்கப்பட்ட கடன் நிறுத்தப்பட்டன. இதனால், நிர்மாணப்பணிகளும் இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில்,சர்வதேச நாணய நிதியத்துடன் கடன் மீள் கட்டமைப்பு தொடர்பாக அரசாங்கம் கலந்துரையாடல்களை நடத்தி வருவதால்,இதன் பயன் கிடைக்கும் வரை காத்திருக்காது விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் நிதியை பயன்படுத்தி இரண்டாவது ஓடுதளத்தின் அத்தியாவசிய நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் நிர்மாண நடவடிக்கைகளை ஜப்பான் விமான நிலைய ஆலோசனை நிறுவனத்தின் (JAC) மேற்பார்வையின் கீழ் இலங்கை எக்சஸ் நிறுவனம் மேற்கொண்டு வருவதாக துறைமுக, கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்நடவடிக்கைக்காக 500 மில்லியன் ரூபா விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தால் செலவிடப்படவுள்ளது. நிர்மாண பணிகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் துறைமுக, கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, அமைச்சின் செயலாளர் கே.டி. எஸ் ருவன்சந்திர, விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவன தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜி. ஏ. சந்திரசிறி மற்றும் நிர்மாண ஆலோசனை நிறுவன அதிகாரிகள் மற்றும் நிர்மாண நிறுவனத்தின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## இலங்கைமலேசியாவுக்கிடையே...

இலங்கைக்கு ஈர்க்க முடியும் எனவும் மலேசிய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

வளர்ந்து வரும் ஹோட்டல் தொழில் துறைக்கு மேலதிகமாக, இலங்கையில் புதிய துறைகளில் முதலீடு செய்வதற்கு முன்வருமாறு மலேசிய தொழில்முனைவோரை பிரதமர் வலியுறுத்தினார். மலேசியா சமீபத்திய ஆண்டுகளில் இலங்கையின் முதல் 06 முதலீட்டு தொழில்முனைவோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒரு பில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களை நன்கொடையாக வழங்கிய மலேசிய அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் பிரதமர் நன்றி தெரிவித்தார். மலேசியா 63,000 மலேசிய ரிங்கிட் அல்லது 14,645 அமெரிக்க டொலர் மதிப்பிலான மருத்துவப் பொருட்களை நன்கொடையாக வழங்கியது.இவற்றில்,புற்று நோயாளர்களுக்கான மருந்துகளும் உள்ளடங்குகின்றன.

உயர்மட்ட தொடர்புகள், வரலாற்று உறவுகள், மக்களிடையேயான தொடர்புகள், புவியியல் நெருக்கம் மற்றும் இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவின் ஆழமான உறவுகள் ஆகியவற்றை மேற்கோள் காட்டி, மலேசிய உயர் ஸ்தானிகர் தனது அரசாங்கம் பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பை அதிகரிக்க எதிரபார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டில், இலங்கை மற்றும் மலேசியா ஆகிய இரு நாடுகளும் வேலைவாய்ப்பு மற்றும் திருப்பி அனுப்புதல் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இலங்கையர்களுக்கான மலேசிய வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டை 10,000 ஆக உயர்த்தியதற்கு மலேசிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்த பிரதமர், உற்பத்தி மற்றும் தாதியர் போன்ற புதிய துறைகளை வேலைவாய்ப்பு பட்டியலில் சேர்க்குமாறு கேட்டுக்கொண்டார்.

இந்த சந்திப்பில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் மலேசிய உயர்ஸ்தானிகராலயத்தின் முதலாவது செயலாளர் அனூரின் இக்னேஷியஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## ஊடக ஒழுங்குபடுத்தல் சட்டமூலம்...

இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் முக்கிய முதலாவது நோக்கம் கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பது . இரண்டாவது, சரியான தகவலை அறிந்து கொள்வதற்கான உரிமையை பாதுகாத்தல் என்பவையாகும்.

இந்த அடிப்படையிலேயே இச்சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.மக்கள், சரியான தகவலை பெற்றுக் கொள்வதற்கான உரிமை இதன்மூலம் கிடைக்கிறது. அதேபோன்று எவராவது தவறான செய்தியை வெளியிட்டால் அரசாங்கத்தின் மூலமாக அதனை ஒழுங்குபடுத்துவது அவசியமாகிறது. இதனை ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் ஏற்றுக் கொள்கின்றது.

கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட சுயாதீன ஊடக ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, சுயாதீன ஒழுங்குபடுத்தலை தயாரிப்பது தொடர்பில் தசாப்த காலமாக பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது. எனினும், இதுவரை சம்பந்தப்பட்டோரின் ஒத்துழைப்புடன் அதற்கான ஒழுங்குபடுத்தலை முன்னெடுக்க முடியாத நிலையே காணப்படுகிறது.

இதனதலேயே, தற்போது அது தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பாளர்களின் சங்கத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வரைபு ஒன்றை தயாரித்து சுயாதீனமான ஒழுங்குபடுத்தலுக்கான சட்ட நியமங்களை உருவாக்கலாம். இதற்கு சட்ட ரீதியான அதிகாரத்தை வழங்குவதையே இச்சட்டமூலம் குறித்த அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். இந்த சட்டமூலத்தில் உள்ளடக்கப்படும் எந்த சரத்திலும் சட்டம் தொடர்பாக குறிப்பிடப்படவில்லை. அந்த வகையில் அது தொடர்பில் அவர்களுக்குத் தீர்மானிக்க முடியும். உச்ச நீதிமன்றத்தின் வியாக்கியானத்துக்கு முரணல்லாத வகையிலேயே, இதில் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பை மீறும் எந்த விடயங்களும் இதில் உள்ளடக்கப்படவில்லை.

இது தொடர்பான விவாதம் அவசியமென்பதால், சம்பந்தப்பட்ட ஒளிபரப்பாளர்கள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு, தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட குழுவின் அங்கத்தவர் என்ற வகையில் இந்த விடயங்களை என்னால் குறிப்பிட முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## முன்னேற்றகரமான சட்டங்களை...

இவ்வாறு உருவாக்கப்படும் சட்டங்கள் வெறும் காகிதமாக இல்லாமல், அவற்றை நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம். அதைவேளை, அடிப்படை கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டால் ஒருபோதும் நாடு முன்னேற்றமடைய முடியாது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நிலையிலும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டியவர்கள், இன்னும் அதனை கற்றுக் கொள்ளவில்லை. மக்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட பெரிய காகமே, இந்த அரசாங்கத்தை இன்றும் பாதுகாக்கிறது. மக்கள் போராட்டத்தால் சிறிது காலம் விலகியிருந்தவர்களுக்கும் எதிர்வரும் நாட்களில் அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது. சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்கு அமையவே தற்போது சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. சட்டங்களை இயற்றிவிட்டோம் என சர்வதேசத்திடம் கூறிவிட்டு அரசாங்கம் பொறுப்பில் இருந்து விலகிக் கொள்ள முடியாது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 53 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது.பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை அசமந்த போக்குடனேயே செயற்படுவதாக இலங்கைக்கான மனித உரிமை பிரதிநிதிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். அதுவே உண்மையும் கூட. பாதிக்கப்பட்ட தரப்பினர் தொடர்பில் இலங்கை சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகள், எதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. ஊழல் மோசடிகள் நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு பிரதான காரணமாக அமைகிறது. மோசடி செய்யப்பட்ட அரசாங்கத்தின் நிதி மீண்டும் அரசுடைமையாக்கப்பட வேண்டும் என மக்கள் வலியுறுத்தி வருகிறார்கள் .இந்த கோரிக்கை ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக நிறைவேற்றப்படுமா என்பது சந்தேகத்துக்குரியதே என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆளும், எதிரணிகள் திருத்தங்களை...

சொத்துக்களை சேகரித்து உள்ளூர் வங்கிகளிலோ அல்லது வெளிநாடுகளிலோ வைத்திருப்பவர்கள் தொடர்பிலும் இச்சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதிகளவு சொத்துக்களை வைத்திருப்பவர்கள் தொடர்பில், இதன் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால் புதிய சட்டமொன்றை கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சிறந்த ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிக்கமையவே, ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், நாட்டு மக்கள் தற்போது 225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் விமர்சிக்கிறார்கள்.ஆகவே ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு சகல அரசியல்வாதிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும்.

மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய அரசாங்கம் செயற்படாவிட்டால் மக்கள் அதற்கு எதிர்மறையாகவே செயற்பட்டு , பாராளுமன்றத்தையும் விமர்சிப்பார்கள்.

அந்த வகையில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்துக்காக முன்வைக்கப்படும் திருத்தங்களை வெளிப்படைத் தன்மையுடன் ஏற்றுக்கொள்ள தயாராகவுள்ளோம். ஊழல் எதிர்ப்பு தொடர்பான ஐக்கிய நாடுகள் சபை சமவாயத்தில் இலங்கை 2004 ஆம் ஆண்டு கைச்சாத்திட்டது. இந்நிலையில் 19 ஆண்டுகள் கடந்தும் ஊழல் எதிர்ப்பு சட்டம் நிறைவேற்றப்படவில்லை.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் ஊழல் எதிர்ப்பு சட்டத்தை இயற்ற ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டது.இருந்தபோதும் இதன் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. 2022 ஆம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தை தொடர்ந்து ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை இயற்ற தீர்மானிக்கப்பட்டது.

துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகளுடன் சட்டமூலத்தை தயாரிப்பதற்காக விசேட குழு நியமிக்கப்பட்டது. பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூல வரைபை, ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினர் .சட்டமூலத்தை உயர்நீதிமன்றம் முழுமையாக பரிசீலனை செய்து பல திருத்தங்களை முன்வைத்துள்ளது. இத்துடன் எதிர்க்கட்சியினரும் இதற்கான திருத்தங்களை முன்வைத்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துறைசார் மேற்பார்வை குழு அமர்வின் போது முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் இறுதியான தீர்மானத்தை எடுக்க முடியவில்லை.

இதற்கமைய சட்டமூலம் மீதான விவாதத்தை மேற்கொண்டு கட்சித் தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் அடுத்த பாராளுமன்ற அமர்விலும் இரு நாள் விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தொடர்பில் மக்கள் மத்தியில் முழுமையான நம்பிக்கை கிடையாது. இதன் காரணமாகவே ஊழல் எதிர்ப்பு சட்டத்தை இயற்ற வலியுறுத்தப்பட்டுள்ளது.

பாரிய மாற்றத்துக்கான அம்சங்களை இந்த சட்டமூலம் கொண்டுள்ளது. ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவுக்கான உறுப்பினர்கள் அரசியலமைப்பு பேரவையின் ஊடாகவே நியமிக்கப்படுவார்கள்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு ஓய்வுபெற்ற அதிகாரிகளை நியமிப்பது தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி காணப்படுகிறது.ஆகவே ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் ஊடாக அமைக்கப்படும் புதிய ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் 62 வயதை அண்மித்து,துறைசார் நிபுணத்துவத்தை கொண்டிருக்க வேண்டும் என்ற விடயமும் கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 08ஆம் நாள் வியாழக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 03

## குறள் தரும் சிந்தனை



ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்
நன்றெய்தி வாழ்வதோர் ஆறு

ஒரு பொருள் பெற்று நூறு மடங்கு பொருளை இழந்து விடும் சூதாடிகளுக்கும், நன்மை பெற்று வாழும் ஒரு வழி உண்டோ?

# அதிகரிக்கப்பட்ட விலைகள் குறைக்கப்படுவதே நியாயம்!

உணவுப் பண்டங்களின் விலை இன்னுமே குறைக்கப்படாமலிருப்பது குறித்து பொது மக்கள் கடும் விசனம் தெரிவிக்கின்றனர். நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் உணவுப்பண்டங்களின் விலைகள் பெருமளவில் அதிகரித்திருந்தன. அதற்கு நியாயமான காரணங்களும் இருந்தன. டொலர் பற்றாக்குறை காரணமாக இறக்குமதிப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டியிருப்பதாக வர்த்தகர்கள் தெரிவித்திருந்தனர். எனவே உணவுப் பொருட்களின் விலைகளும் கிடுகிடுவென உயர்ந்திருந்தன.

பொருளாதார நெருக்கடி உச்சத்தில் நிலவிய காலப் பகுதியில் கோதுமைமாவின் விலை 400 ரூபாவையும் தாண்டியவாறு இருந்தது. அதுமாத்திரமன்றி, அன்றைய காலப்பகுதியில் கோதுமைமாவைப் பெற்றுக் கொள்வதே சிரமமாக இருந்தது. கோதுமை மாவின் விலை அதிகரிப்புக் காரணமாக கோதுமை மாவிலிருந்து தயாராகும் உணவுப்பண்டங்களின் விலைகளும் அக்காலப்பகுதியில் உச்சத்துக்குச் சென்றிருந்தன.

ஆனால் இன்று நிலைமை அவ்வாறாக இல்லை. கோதுமைமாவின் விலை நன்றாகக் குறைந்திருக்கின்றது. அதாவது பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், கோதுமைமாவின் விலையானது சுமார் அரைவாசிக்குக் குறைந்து விட்டதென்றுதான் கூற வேண்டியிருக்கின்றது. பொதியிடப்படாத நிலையில் உள்ள கோதுமைமாவின் விலையானது 200 ரூபாவுக்கும் குறைவாக சமீபத்தில் விற்பனை செய்யப்பட்டதைக் காண முடிந்தது.

நிலைமை இவ்வாறிருக்கையில், பாண் உட்பட கோதுமைமாப் பண்டங்களின் விலைகளில் வீழ்ச்சியைக் காண முடியவில்லை. பாணின் விலை ஓரளவு குறைக்கப்பட்டது உண்மைதான். ஆனால் கோதுமை மாவின் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்த பின்னர் பாணின் விலை குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டிருக்க வேண்டும். அதுதான் நியாயமும் ஆகும். ஆனால் பாணின் விலை 10 ரூபாவினால் மாத்திரமே குறைக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பேக்கரிகளில் பாணின் விலையானது கடந்த செவ்வாய்க்கிழமை வரை 150 ரூபாவாகவே இருந்தது.

கோதுமைமாவின் விலை பெருமளவு குறைக்கப்பட்டிருக்கையில், பாண் மற்றும் ஏனைய கோதுமை மாப்பண்டங்களின் விலைகளும் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட வேண்டுமென்பதே நுகர்வோரின் கோரிக்கையாக இருக்கின்றது. பாணுக்கு வெறுமனே 10 ரூபாவைக் குறைப்பதனால் கோதுமைமாவின் விலைக்குறைப்பின் பயன்களை மக்களால் அனுபவிக்க முடியாமல் போய்விடுமென்பதே மக்களின் ஆதங்கம் ஆகும்.

பேக்கரிகளில் தயாரிக்கப்படுகின்ற பாண் மாத்திரமன்றி ஏனைய சிற்றுண்டிகளின் விலைகளும் மிக அதிகமாகவே உள்ளன. அதிகளவான சிற்றுண்டிகளின் விலை 100 ரூபாவிலும் கூடுதலாகவே உள்ளது. எனவே அவற்றை வாங்குகின்ற மக்களின் தொகையும் குறைவாகவே உள்ளது. கோதுமைமாவில் இருந்து தயாராகின்ற உணவுப்பண்டங்களை வாங்குவதற்கு மக்கள் தயங்குவதைக் காண முடிகின்றது.

கோதுமைமாவின் விலை குறைந்திருக்கின்றது. சமையல் எரிவாயுவின் விலையும் பெருமளவில் குறைந்திருக்கின்றது. அதேசமயம் உணவுப்பண்டங்களின் தயாரிப்புக்கான சேர்மானங்களின் விலைகளும் குறைந்திருக்கின்றன. ஆனால் கோதுமை மாப் பண்டங்களின் விலைகளில்தான் மாற்றத்தைக் காண முடியாதிருக்கின்றது. அவற்றின் விலைகளை தாராளமாகக் குறைப்பதற்கான காலம் இப்போது வந்துவிட்டதென்பதுதான் மக்களின் கருத்தாக இருக்கின்றது.

இலங்கையில் வர்த்தகத்துறையினர் மத்தியில் பொதுவானதொரு பாரம்பரியம் உள்ளது. மூலப் பொருட்களின் விலைகள் அதிகரித்தால் வர்த்தகர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை தாராளமாகவே அதிகரித்துக் கொள்வது வழக்கமாகும். ஆனால் மூலப்பொருட்களின் விலைகள் குறைகின்ற போது, உற்பத்திப் பொருட்களைக் குறைப்பதற்கு அவர்கள் முன்வருவதில்லை. விலைக்குறைப்பை சிறியளவில் மாத்திரம் செய்து விட்டு சமாளித்து விடுகின்றனர்.

கோதுமைமாவில் இருந்து தயாராகின்ற ஏராளமான பொருட்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.பிஸ்கட், நூடுல்ஸ் உட்பட பல்வேறு உணவுப்பொருட்களை கடைகளில் நாம் காண முடியும். பொருளாதார நெருக்கடி உருவெடுத்ததும் அந்த உணவுப்பொருட்களின் விலை இருமடங்குக்கும் அதிகமாக அதிகரிக்கப்பட்டது.

அதன் பிறகு பலதடவை கோதுமைமாவின் விலை குறைக்கப்பட்டது. ஆனால் கோதுமைமாவில் தயாராகும் பிஸ்கட் போன்ற உணவுப்பொருட்களின் விலை குறிப்பிடத்தக்களவு குறைக்கப்படவேயில்லை. சிறிதளவு மாத்திரமே விலைக்குறைப்பு செய்யப்பட்டுள்ளது. மூலப்பொருளுக்கான விலை அதிகரிப்பைக் காரணமாக வைத்து தயாரிப்புப் பொருளின் விலையை அதிகரித்துக் கொண்ட வர்த்தக நிறுவனங்கள், கோதுமைமாவின் விலை குறைக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் உணவுப்பண்டங்களின் விலையைக் குறைப்பதற்குத் தயங்குவதன் காரணம் என்ன?

வர்த்தக சமூகத்தினர் எப்போதும் தங்களது நலன்களை மாத்திரமே முன்னிலைப்படுத்திச் செயற்பட்டு வருகின்றனர். நுகர்வோரின் பாதிப்புகள் குறித்து வர்த்தகர்கள் பலர் கரிசனை கொள்வதில்லை. அதிக வருமானம் ஈட்ட வேண்டுமென்ற குறிக்கோளுடன் மாத்திரம் வர்த்தகர்கள் இவ்வாறு செயற்படுவது நியாயமானதல்ல.

editor.tkn@lakehouse.lk

# சமூகநல ஆர்வலர் விக்கிரமசிங்க இன்று 74 ஆவது அகவையில்

## மலையக மக்கள் நலனுக்கும், தமிழ் இலக்கியத்துக்கும் உழைக்கும் ஊடகவியலாளருக்கு அபிமானிகள் பிறந்ததின வாழ்த்து

பிரபல சமூகநல ஆர்வலரும் ஊடகவியலாளரும், நூல் வெளியீட்டாளருமான எச்.எச்.விக்கிரமசிங்க (மாத்தளை செல்வா) இன்று தனது எழுபத்து நான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

மாத்தளை மாவட்டத்தின் நோர்த் மாத்தளை தோட்டத்தில் பிறந்த இவர், தனது பாடசாலைக் கல்வியை முடித்ததும் இளமைப் பருவத்திலேயே வீரகேசரியில் கடமைக்குச் சேர்ந்தார். பத்திரிகை அலுவலகத்தில் கடமையாற்றிய காலத்தில் பிரபலங்கள் பலருடனும் நெருங்கிப் பழகும் வாய்ப்பை அவர் பெற்றார்.

இயல்பிலேயே சுறுசுறுப்புடன் செயலாற்றும் ஆற்றலுள்ள இவர், பன்முக ஆளுமை கொண்டவர். இவர் மலையகத்தின் எழுச்சியிலும், மக்கள் முன்னேற்றத்திலும் ஆர்வமும் அக்கறையும் கொண்டவர். தான் பிறந்த பெருந்தோட்டப்பகுதி மக்களுக்கு மட்டுமன்றி, உதவிநாடும் அன்பர்கள் பலருக்கும் ஓடோடி வந்து உதவிசெய்யும் மனப்பான்மை கொண்டவராக விக்கிரமசிங்க விளங்குகின்றார்.

இவர் தற்போதும் தளர்ச்சியின்றி, ஓய்வின்றி சமூகத்திற்காக பாடுபட்டு வருகின்றார். இவருடைய தந்தையார் மருத்துவராக இப்பகுதி தோட்டமக்களுக்கு அருஞ்சேவையாற்றியவர், தாயார் குப்பத்து மீனாட்சி அம்மாள் தோட்டப்பகுதியில் அநாதரவான பல பெண்களை ஆதரித்து அன்பு காட்டியவர். பெற்றோரின் சுபாவமே புதல்வரிலும் காணப்படுகின்றது.

மலையகத்தை தனது உயிர்மூச்சாக நேசிக்கும் விக்கியின் பணிகளை ஆன்மீகம், கல்வி, கலை கலாசார இலக்கிய மேம்பாடு, நலிவுற்றோருக்கு உதவுதல் என அடுக்கிக் கொண்டே போகலாம். மலையகத்தின் சகல அமைப்புகளோடும் தொடர்புகொண்டு தனது உயரிய பங்களிப்பை நல்கிவரும் இவர், அனைவரதும் நன்மதிப்பினை பெற்றுத் திகழ்கின்றார்.

மலையக மாணவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து வருகிறார். இவர் மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினராவார். மலையகத்திலும், கொழும்பிலும் நடைபெறும் இலக்கிய மாநாடுகளுக்கும் கருத்தரங்குகளுக்கும்



இவர் தன்னாலியன்ற உதவிகளை நல்கி வருகின்றார். பல சர்வதேச மகாநாடுகளில் மலையகத்தின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தவர். மலையகம் சம்பந்தமான நூல்களை உலக அரசியல் தலைவர்கள் பலருக்கும் வழங்கி, மலையக மக்களின் யதார்த்த நிலையை உலகறியச் செய்து வருகின்றார்.

1974 காலப்பகுதியில் பெருந்தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்ட போது, காலம்



காலமாக தோட்டங்களில் உழைத்த தொழிலாளர்கள் மாத்தளை பகுதியில் வீதிகளில் அநாதரவாகத் திரியும் அவலம் ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் செய்வதறியாது திகைத்து மௌனமாக நின்றபொழுது, இளைஞரான இவர் நிராதரவான மக்களுக்கு கைகொடுத்தார்.

தொழிலாளர்கள் தங்களுக்கு வாராவாரம் கிடைக்கும் பங்கீட்டு அரிசிக்குக்கூட வழியின்றி தவித்த போது, துணிச்சலுடன் களத்தில் இறங்கி உயர் அதிகாரிகளைச் சந்தித்து விசேட அனுமதி பெற்று அம்மக்களின் பசிப்பிணி போக்க அருஞ்சேவையாற்றினார். இதனை இப்பகுதி மக்கள் இன்றும் நன்றியுடன் நினைவு கூருகின்றனர்.

மலையக மக்களை தனது சொந்த உறவுகளாக நேசிக்கும் இவர், அவர்களின் துயரத்தைத் துடைக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறார். ஊடகத்துறையே இவரது விருப்புக்குரிய தொழில் என்றாலும், சமூகசேவையே இவரது இதயத்துடிப்பாகும். இனமத பேதமின்றி எல்லோரும் விக்கியை சொந்தம் கொண்டாடுகின்றனர்.

இவரது குடும்பத்தவர்களும் ஆன்மீகம், சமூகசேவையென பெரும் தொண்டாற்றி வருகின்றனர். இவர் பல்லாண்டு வாழ்ந்து மேலும் அருஞ்சேவையாற்ற வேண்டுமென்பதே இவரது அபிமானிகளின் விருப்பமாகும். கலை, இலக்கிய நண்பர்கள் மற்றும் சமூக அமைப்புகளைச் சேர்ந்தோர் விக்கியின் இன்றைய பிறந்த தினத்தில் அவரை வாழ்த்துகின்றனர்.

**மாத்தளை வடிவேலன்...**

# கல்முனை வைத்தியசாலையில் உலக சுற்றாடல் தின நிகழ்வுகள்

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் பல நிகழ்வுகள் வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ். உதயராஜ், பிராந்திய சுற்றாடல் அதிகாரி திருமதி செவ்வேள்குமரன், வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் ஜெ. மதன், கல்முனை சென்ட்றல் பைனான்ஸ் முகாமையாளர் ஜெ. அனோஜ், வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின்போது கடந்த மாதம் பிறந்த நாளை கொண்டாடிய வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாக பழமரங்கள் அவர்களினால் நடப்பட்டன.




இந்நிகழ்வுக்கான 50 பழமரக்கன்றுகளை சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி பதக்க கல்முனை தமிழ் கோட்ட மாணவர்களினாலும், 25 பழமரக்கன்றுகள் கல்முனை சென்ட்றல் பைனான்ஸ் நிறுவனத்தினராலும் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வின் போது வைத்தியசாலை ஊழியர்களின் குழந்தைகளினால் சுற்றாடல் பாதுகாப்பு, மரங்களை பாதுகாப்போம், பாதுகாப்பான இயற்கை உணவுகள் மற்றும் இயற்கை கிருமி நாசினிகள் என்னும் தொனிப்பொருட்களில் சுற்றாடல் காட்சிப்படுத்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# மனைப் பொருளாதாரம் ஊடாக வருமானம் ஈட்டுவதற்கு வாய்ப்பு

நாட்டின் பின்தங்கிய பிரதேசங்களில் மனைப்பொருளாதாரம் ஊடாக அன்றாட வாழ்க்கையை நடத்தும் மக்களுக்கு வாய்ப்பளித்து தேசிய பொருளாதாரத்துக்கு பங்களிப்பு வழங்க வேண்டியது அவசியம். இலகுவாகக் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு வெளிநாடுகளில் பாரிய கேள்வி காணப்படுகிறது. பிரம்புக் கைத்தொழில், மட்பாண்ட கைத்தொழில், நெசவுக் கைத்தொழில் என்பன எமது நாட்டு மக்களுக்கு சாதாரண தொழிலாக காணப்பட்டாலும் வெளிநாடுகளில் இதற்கு நல்ல வாய்ப்பு காணப்படுகிறது.

அந்த வகையில், made in ceyland என்ற பெயருடன் இலங்கையின் மனைப்பொருளாதாரத்தை சர்வதேச சந்தைக்கு கொண்டு செல்லும் வேலைத்திட்டத்தை made in ceyland நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதனூடாக பின்தங்கிய மாவட்டங்களில் வாழும் மக்களின் பொருளாதாரம் மேம்படுவதுடன் இலங்கைக்கு அந்நிய செலாவணியும் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.


தினேஷ் லக்மால் வாரியப்பெரு

நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தினேஷ் லக்மால் வாரியப்பெரும இந்த வேலைத்திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், "கொரோனா காலப்பகுதியில் எமது நாட்டு மக்கள் சந்தையில் பொருட்களை விற்பனை செய்வதில் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்தார்கள். உற்பத்தி செய்த பொருட்களை விற்க முடியாமலும் வருமானம் பெற முடியாமலும் இருந்த சந்தர்ப்பத்தில் நாம் அவர்களுக்கு கைகொடுக்க முன்வந்தோம். குறிப்பாக மொனராகலை, ஹம்பாந்தோட்டை, அம்பாறை மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் வாழும் மக்களை சந்தித்து மனைப் பொருளாதாரத்தை சர்வதேச சந்தையில் விற்பனை செய்வது தொடர்பாக கலந்துரையாடினோம்.

மனைப் பொருளாதாரம் பரம்பரை பரம்பரையாக சிலர் மேற்கொண்டு வந்தாலும் கொரோனா காலப்பகுதியில் வீட்டில் முடங்கி இருந்த காரணத்தினால் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க தவறிவிட்டார்கள். உற்பத்தி செய்த பொருட்கள் விற்பனையாகாமல் பழுதடைதல் மற்றும் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து எவ்வித வருமானமும் பெற முடியாமல் இருந்தமையால் பலர் இந்த கைத்தொழிலை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

ஆனால், எமது நிறுவனம் அவ்வாறானவர்களை அடையாளம் கண்டு இதன் முக்கியத்துவம் மற்றும் நாட்டின் நலனை கருத்திற் கொண்டு இந்த வேலைத்திட்டத்தினை



ஆரம்பிக்கும் விழிப்புணர்வை ஆரம்பித்தது. குறிப்பாக மொனராகலை, கிளிநொச்சி போன்ற பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களுடன் இணைந்து மனைப்பொருளாதாரப் பொருட்களை கொள்வனவு செய்ய ஆரம்பித்தோம். சிலர் பொருளாதார பிரச்சினைகளால் அவதியுற்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு நிதியுதவி அளித்து அவர்களின் வாழ்வில் சுபிட்சத்தை ஏற்படுத்தவும் நாம் நடவடிக்கை எடுத்தேம்.

நாட்டு மக்கள் இந்த வேலைத்திட்டத்திற்கு பூரண பங்களிப்பு வழங்கியதுடன், மனைப் பொருளாதாரப் பொருட்கள், பிரம்பு, மட்பாண்ட கைத்தொழில் பொருட்களை பாரிய அளவில் எம்மால் கொள்வனவு செய்யக் கூடியதாக இருந்தது. இந்தப் பொருட்களை ஐரோப்பா, மத்திய கிழக்கு நாடுகளான துபாய், நியூசிலாந்து, கனடா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் அவற்றின் ஊடாக எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு உந்து சக்தியாக விளங்கும் வெளிநாட்டு செலாவணியை ஈட்டக் கூடியதாகவும் இருந்தது.

எமது நிறுவனத்தின் பிரதான காரியாலயம் களனியில் அமைந்துள்ளதுடன் கம்பஹா, கொழும்பு, காலி, அவஸ்ஸவாளை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் பிராந்திய வேலைத்தளங்கள் காணப்படுகின்றன" எனக் குறிப்பிட்டார்.

# சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு ஊடாக தொழில்வாய்ப்பு உருவாக்கும் திட்டம்

காத்தான்குடியில் வளர்ந்துவரும் சுற்றுலாவை விரிவுபடுத்தலும் முறைப்படுத்தலும்: நிலைத்து நிற்கும் சுற்றுலா அணுகுமுறையினூடாக கலாசார விழுமியங்களை ஒருங்கிணைத்து வருமானம், வேலைவாய்ப்பினை மேம்படுத்தல் தொடர்பான ஆய்வுரீதியான கலந்துரையாடலொன்று காத்தான்குடி மூன்வெலி ஹோட்டலில் தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.எல்.ஏ. ரவூப் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.


காத்தான்குடியில் ஆய்வுக் கலந்துரையாடல்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான ஆய்வு அலகு கிழக்கு மாகாணத்தை இலங்கையின் முக்கிய சுற்றுலாத்தளமாக மாற்றுகின்ற செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக இந்தத் திட்டத்தினை முன்னெடுத்துள்ளது.

இலங்கையின் மூன்றாவது பிரதான வருமான மூலமாக சுற்றுலாத்துறை விளங்குகின்றது. சுற்றுலாத்துறையில் கிழக்கிலங்கையின் வகிபாகத்தை குறிப்பாக காத்தான்குடி நகரின் பங்கை கணிசமாக உயர்த்துவதில் உள்ள பலம் மற்றும் பலவீனங்கள், சாதக பாதகங்கள் தொடர்பில் இந்த கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் காத்தான்குடி நகரசபையின் முன்னாள் தவிசாளர், நகரசபை செயலாளர், பிரதேச செயலாளர், காத்தான்குடி முஸ்லிம் நிறுவனங்கள் பள்ளிவாயல்கள் சம்மேளன உறுப்பினர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், உள்ளூர் ஆய்வு அமைப்புகள், முதலீட்டாளர்கள், உணவக உரிமையாளர்கள், விடுதி வழங்குநர்கள், விமான டிக்கட் மற்றும் சுற்றுலா ஒருங்கிணைப்பு சேவை வழங்குநர்கள், மீன்பிடி அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங்க நிர்வாகிகள், சுற்றுலாசார் பொருள் உற்பத்தியாளர்கள், வங்கி முகாமைளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

அகில இலங்கை பொருளியல் நிபுணர்கள் சங்கத்தின் தலைவரும், தென்கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவபீடத்தின் முகாமைத்துவத்துறைத் தலைவருமான பேராசிரியர் முஸ்தபா விசேட விரிவுரை ஒன்றை வழங்கினார்.

கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியரும் சுற்றுலாத்துறை நிபுணருமான சுரேஷ் அவர்களது நெறிப்படுத்தலின் பேரில் இடம்பெற்ற ஆய்வு கலந்துரையாடல் மூலம் காத்தான்குடியின் சமூக கலைக்கலாசார மதரீதியான விழுமியங்களை உட்படுத்தி அவற்றை பாதிக்காத சுற்றுலா முறை ஒன்றை பின்பற்றுதல், சுற்றுலாத்துறை சார்பான அனைத்து மட்டங்களிலும் உள்ள நபர்களை உள்ளடக்கிய குழு ஒன்றை நிறுவுதல் போன்ற சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

இணைய மற்றும் சமூகவலைத்தளங்களை பயன்படுத்தி சுற்றுலாத்துறையை பாரிய அளவில் மேம்படுத்த தேவையான செயன்முறை விளக்க விரிவுரைகளும் இந்த நிகழ்வில் இடம்பெற்றன.

கிழக்குப் பல்கலைக்கழ பேராசிரியர் சுரேஷ் அவர்களுக்கு நினைவுச்சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*

# சீனன்கோட்டையின் பல்துறை அபிவிருத்திக்கு முன்னோடியாக விளங்கிய ஜெமால்தீன் ஒப்ஸர்

சமூகத்துக்காக உழைத்து பெரியவர்களைப் பற்றி பிற்காலச் சந்ததியினரும் அறிந்திருப்பது கட்டாயம். இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் பேருவளை முக்கிய இடம் பெற்றுள்ளது. பேருவளை, சீனன் கோட்டை வரலாற்றில் மதம், கல்வி,சமூகம் சார்ந்த பல அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னோடியாக இருந்து செயல்பட்ட ஜெமால்தீன் ஒப்ஸர் என்பவரைப் பற்றி இங்கு கூற விரும்புகின்றேன்.

ஜெமால்தீன் ஒப்ஸர் என அழைக்கப்பட்ட இவர் M.L.M.A.ஜெமால்தீன் ஆவார். இவர் சில வருடங்கள் சீனன் கோட்டையில் கிராமத் தலைவராக (Village Headman) கடமை புரிந்ததால் ஒப்ஸர் என்ற பெயரால் அழைக்கப்பட்டார். பத்தையைச் சேர்ந்த ஒரு கௌரவமான குடும்பத் தலைவர் நெய்னா மரிக்கார். இவர் மகன் வழிப் பேரன் ஜெமால்தீன் தனது பரம்பரைத் தொழிலான மாணிக்கக்கல் வியாபாரமே இவரது தொழில். இவர் ஆங்கிலம் படித்தவர். அழகானவர்,நற்குணப் பண்புகள் நிறைந்தவர், ஆளுமை மிக்கவர், சமூகத்தை முன்னேற்ற வேண்டும் என்ற ஆர்வம் கொண்டவர்.

அக்காலத்தில் இங்கே இருந்த ஜும்ஆப் பள்ளியே பெரிய பள்ளி. பள்ளியை நிர்வாகம் செய்ய ஒரு குழு இருந்தது. மாணிக்கக் கல் வியாபாரம் நடக்கும் போது பள்ளிக்காகத் தரகுப் பணம் அறவிடப்பட்டது. அது மாத்திரமே பள்ளிக்குக் கிடைத்த வருமானம். இந்த நிர்வாகக் குழுவில் ஒரு அங்கத்தவராக ஜெமால்தீன் ஒப்ஸர் செயலாற்றினார். இதன் போது பள்ளி நிர்வாகத்தை

ஒழுங்குபடுத்த வேண்டும் என அக்குழுவுக்கு உணர்த்தினார். அதனை ஏற்றுக் கொண்ட அக்குழு சீனன் கோட்டைப் பள்ளிச் சங்கம் (China Fort Mosque Society) என்ற சங்கத்தின் மூலம் பள்ளி நிர்வாகத்தில் பல திருப்பங்கள் கொண்டுவரப்பட்டன. தரகுப் பணம் சேர்ப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டு அப்பணம் பள்ளிக் கணக்கில் பதியப்பட்டது. பள்ளியின் வரவும், செலவும் நன்கு பதியப்பட்டது மாத்திரமன்றி நோன்புப் பெருநாளைக்கு மறுநாள் பள்ளியில் பொதுக் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டு வரவு, செலவு சமர்ப்பிக்கப்பட்டு மற்றும் பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டு முடிவெடுக்கப்பட்டது. பள்ளிச் சங்கம் 1927ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு

95 வருடங்கள் ஆகின்ற போதும் இப் பொதுக்கூட்டம் இன்றுவரை இடைவிடாது நடந்து கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

1927ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பள்ளிச் சங்கத்தின் முதல் செயலாளராக தெரிவானவர் ஜெமால்தீன் ஒப்ஸர் ஆவார். உப செயலாளராக ஜனாப் I.L.M. யூஸுப் தெரிவானார்.இவர்களின் முயற்சியால் ஊர் மக்களின் துணை கொண்டு மார்க்க விடயங்களிலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் சீனன் கோட்டையில் முஸ்லிம் பிள்ளைகள் கல்வி கற்க ஒரு பாடசாலை இருக்கவில்லை. அப்பெரும் குறையை நிவர்த்தி செய்ய பள்ளி வளாகத்தில் ஒரு சிறு பாடசாலை அமைக்கப்பட்டு அரசின் ஒத்துழைப்புடன் செயல்படத் தொடங்கியது. இப் பாடசாலையைத் திறந்து வைப்பதற்கு அப்போதைய கல்வி அதிகாரியாக இருந்த ஒரு ஆங்கிலேயர் வந்தாராம். பள்ளிச் சிறுவர்கள் வரிசையாக நின்று 'ஹிப் ஹிப் ஹுரே' (Hip Hip Hurrey) என்று ஆரவாரஞ் செய்து அவரை வரவேற்றதைக் கண்ணுற்ற ஊர் மக்கள் பிரமித்துப் போனார்களாம். இச்சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர் சொன்னதை நான்

**'ஒரு சமூகத்திற்கு சேவை செய்பவர் தான் அச்சமூகத்தின் தலைவன்.' நபி பெருமானாரின் ஹதீஸ் ஜனநாயகப் பண்பும் இதுவே!**

சிறுமியாய் இருந்த போது கேள்விப்பட்டது எனக்கு ஞாபகமிருக்கிறது.

இப்பாடசாலையே பல படிகளைத் தாண்டி அபிவிருத்தியடைந்து இன்று அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையாக (ALHumaisara National School)வளர்ச்சியடைந்துள்ளது மகிழ்ச்சியைத் தருகின்றது.

மேலும் ஜெமால்தீன் ஒப்ஸர் செய்த மற்றுமொரு சேவை பிள்ளைகள் குர்ஆன் ஓதுவதற்கு ஒரு குர்ஆன் பள்ளிக்கூடத்தை தொடங்கி வைத்தது. 'ஸாரா' என பெயர் பெற்ற ஒரு பெண்ணை அமர்த்தி இப்பள்ளிக் கூடம் அமைக்கப்பட்டது. இப்பெண்மணி ஸாரா லெப்பை என்றும், ஸாராச்சி என்றும் அழைக்கப்பட்டார்.

இப்பாடசாலை 25 வருடங்களுக்கும் மேலான காலம் ஆண், பெண் பிள்ளைகள் திருக் குர்ஆன் ஓதக் கற்றனர். நானும் இங்கேயே திருக் குர்ஆனை ஓதி முடித்தேன். இப்படி சமுதாயத்திற்கு பல அரிய சேவைகளைச் செய்த ஜெமால்தீன் ஒப்ஸரின் வாழ்நாள் நீடிக்கவில்லை. இளம் மனைவியையும், முஹம்மது ஹனீபா, முஹம்மது ஷாபி, முஹம்மத் அஜ்வாத் முஹம்மது மசூத் என்ற மூன்று சிறு ஆண் மக்களையும் விட்டு தனது 40 ஆவது வயதில் காலமானார். அவர் காலமாகும் பொழுது இளைய மகன் 8 மாதம் தவழும் குழந்தையாக இருந்தார்.

ஜெமால்தீன் ஒப்ஸரின் மறைவுக்குப் பின் உப செயலாளராக இருந்த I.L.M. யூஸுப், S.M. ஜாபிர் கூட்டுக் செயலாளராக((Joint Secretaries) இருந்து பள்ளிச் சங்கத்தை வழி நடாத்தினர். பிற்காலத்தில் பேருவளை நகரத்திற்கு நகர சபை அந்தஸ்து கிடைத்ததன் பின்பு இவர்கள் இருவரும் நகர சபையின் தலைமைத்துவத்துக்காக தேர்தல்களில் போட்டியிட நேர்ந்தது.

பல முறை இவர்கள் இருவரும் மாறி மாறி நகர சபைத் தலைவர்களாக இருந்து அரசியல் சேவை செய்தனர். ஆனால் பள்ளி விடயத்தில் ஒரு போதும் அரசியலை நுளைக்கவில்லை.

இது போற்றத்தக்கது. மேலும் 30 வருடங்களுக்கு மேல் பள்ளிச் சங்கத் தலைவராய் கடமையாற்றிய முஹம்மது ஹனீபா ஆலிம் 1970ஆம் ஆண்டு காலமானார். இதன் பின் நளீம் ஹாஜியார் பள்ளிச் சங்கத் தலைவரானார். காரியதரிசியாக கடமையாற்றிய அல்ஹாஜ் S.M.ஜாபிர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். எனவே இவருடைய இடத்துக்கு ஜெமால்தீன் ஒப்ஸரின் இளைய மகன் சட்டத்தரணி A.J.M.மசூத் காரியதரிசியாக தெரிவு செய்யப்பட்டார்.

இவர்களது காலத்தில் தான் பழைய பள்ளி இருந்த இடத்தில் புதிய பள்ளி விசாலமாகவும், இரண்டு மாடி கொண்ட அழகிய தோற்றத்தில் பள்ளிவாசல் அமைக்கப்பட்டது. பெண்கள் ரமழான் மாதத்தில் தராவீஹ் தொழுகையை தொழுவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டதும் இக்காலப்பகுதியிலாகும்.

ஜெமால்தீன் ஒப்ஸர் இரண்டு பேரர்களான முன்னாள் பேருவளை நகர சபை உறுப்பினர் தஸ்லீம் சாபி, ரம்ஸி அஜ்வாத் தமது பாட்டனாரைப் போலவே கல்வி அபிவிருத்தியிலும், சமூக சேவைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளிச் சங்கக் காரியதரிசியாய் கடமை புரிந்த சட்டத்தரணி A.J.M. மசூத் தன் தந்தையைப் போன்றே இளவயதில் தனது 51ஆவது வயதில் 1981ஆம் ஆண்டு காலமானார்.

ஹாஜியானி சம்ஸுன் நஹார்
ஜெமீல் மரிக்கார். J.P.

# நரேந்திர மோடியின் அமெரிக்க விஜயம் உக்ரேன் சமாதான ஒப்பந்தம் தொடர்பிலானது

அமெரிக்க ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று நான்கு நாள் முழுமையான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் மோடி, கடந்த செவ்வாயன்று நியூயோர்க் ஜோன் கென்னடி விமான நிலையத்தை சென்றடைந்தார். அவருக்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

'லொட்டே நியூயோர்க் பெலஸ்' ஹோட்டலில் தங்கியிருந்த இந்தியப் பிரதமரை ட்விட்டர் உரிமையாளரும் உலகக் கோடீஸ்வரருமான எலொன் மஸ்க் சந்தித்து பொருளாதாரம் மற்றும் முதலீடுகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மஸ்க், சந்திப்பு மிகச் சிறப்பாக இருந்ததாகவும் அடுத்த ஆண்டு தன் டெஸ்லா நிறுவனத்துடன் இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தியாவை விட அதிக நம்பிக்கை அளிக்கக்கூடிய வேறொரு நாடு கிடையாது எனக் குறிப்பிட்ட அமெரிக்கக் கோடீஸ்வரர், தான் மோடியின் ரசிகன் என்றும் அவரது தலைமைத்துவத்தை விரும்புவதாகவும் குறிப்பிட்டார். தன் பயணத்தை ஆரம்பிக்குமுன் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட மோடி, அமெரிக்க மற்றும் இந்தியத் தலைவர்களுக்கு மத்தியில் முன்னொரு பொழுதும் இருந்திராத பரஸ்பர நம்பிக்கை தற்போது காணப்படுவதாகவும், இரு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு தொடர்பான கூட்டுறவானது மிக முக்கியமான தூணாக இந்த உறவுப் பாலத்தில் விளங்கப் போவதாகவும் குறிப்பிட்டார்.

மோடியின் அமெரிக்க விஜயம் பற்றி பேசிய அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சிலுக்கான இணைப்பாளர் ஜோன் கிர்பி, அமெரிக்க ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையின் போது உக்ரேன் யுத்தம் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் அப்போது சமாதான யோசனைகள் முன் வைப்பது தொடர்பாகவா அல்லது சமாதான உச்சிமாநாட்டை நடத்துவது தொடர்பாகவா பேச்சுவார்த்தை அமைந்திருக்கும் என்பதைத் தன்னால் கூறமுடியாது என்றார். இது மிக முக்கியமான வாரமாக அமையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் விண்வெளி இயற்பியலாளரான நீல் டைசனுடன் நியூயோர்க்கில் இந்தியப் பிரதமர் பேச்சுவார்த்தை நடத்தினார். சிறப்பான எதிர்காலம் இந்தியாவுக்கு உள்ளது என்றும் மோடியின் மனதில் உள்ள இந்தியாவுக்கான வளர்ச்சித் திட்டங்களை அறிந்து தான் மகிழ்வுற்றதாகவும் கருத்து வெளியிட்ட நீல் டைசன், இந்தியாவினால் எவற்றை எல்லாம் சாதிக்கலாம் என்பதற்கு முடிவே கிடையாது என தான் நம்புவதாகவும் பின்னர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்க நோபள் பரிசு பெற்ற பேராசிரியர் போல் ரோமரையும் பிரதமர் சந்தித்தார்.

# தேசிய, சிவில் சமூக அமைப்புக்கள் முரண்பட்டுக் கொள்வதால் இலக்குகளை வெற்றிகொள்ளுவதில் சிரமங்கள் ஏற்படலாம்

மாவத்தகம தினகரன் நிருபர்

சமூக மேம்பாட்டுக்காக செயற்படும் தேசிய, சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. ஆனால் இவர்கள் கருத்து முரண்பட்டுக் கொண்டு சமூக ஊடங்களில் பகிரங்கமான முறையில் விமர்சித்துக் கொண்டு இருக்கின்றனர். இதனால் சமூகத்தின் இலக்குகளை வெற்றிகொள்வதில் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்க வேண்டி வரும். இத்தகைய செயற்பாடுகள் எமது எதிர்கால சமூகத்திற்குப் பெரும் சவாலாக அமைகிறது என்று அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தலைவரும் தேசிய விவகாரங்களுக்கான தவிசாளர் சஹீட் எம். ரிஸ்மி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபைக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கிடையிலான கருத்து முரண்பாடுகள் சமூக ஊடங்களில் பகிரங்கமாகப் பேசப்படுகிறது. இந்த அணுகுமுறை ஆரோக்கியமானதல்ல. சமய விவகாரங்கள் எனும் போது ஜம்மிய்யதுல் உலமாவும். தேசிய விவகாரங்கள் எனும் போது அரசியல் தலைவர்கள், சிவில் சமூக அமைப்புக்களும் எல்லோரும் சேர்ந்து செயற்பட வேண்டும்.

இந்த தேசிய, சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து செயற்படும் போதுதான் அது வலுமிக்கதாக அமையும். எனினும் ஒரு தேசிய சிவில் சமூக அமைப்பு செயற்படும் போது அதற்கு ஏனைய அமைப்புக்களுடைய ஒத்துழைப்பு அவசியமாகும். ஒரே வேலையை இரண்டு பேர் செய்யக் கூடாது. எந்தத் துறையை செய்வதற்கான திறமை அந்த அமைப்புக்கு இருக்கின்றதோ அவற்றை அவர்கள் சுயமாக செய்ய விடுதல் வேண்டும். இன்னுமொரு அமைப்பு அதற்குள் மூக்கை நுழைப்பது தவறாகும். அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபையின் மத சார் விடயங்களில் அவர்களுக்கு முக்கியத்தை கொடுக்க வேண்டும். அதேவேளை அவர்கள் ஏனைய தேசிய சிவில் அமைப்புக்களின் பணிகளை மதிக்க வேண்டும். சேர்ந்து செயற்பட வேண்டி விடயங்களில் சேர்ந்தும் தனியாக செயற்பட வேண்டிய விவகாரங்களில் தனியாகவும் செயற்படுதல் வேண்டும். எல்லாவற்றிலும் நான் என்ற ரீதியில் செயற்படுவதைத்



தவிர்த்து ஒவ்வொரு சமூக அமைப்பும் ஆளுமையும் வல்லமையும் மிக்கவை என்ற மனோ நிலையை அறிந்து செயற்பட வேண்டும்.

அந்த வகையில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய விவகாரங்களுக்கான பிரிவு பல்லின சமூகங்களுக்கிடையே நிலையான சகவாழ்வுக்கும் ஒற்றுமைக்கும் பரபஸ்பர நட்புறவுக்கும் வழிகோலும் நடவடிக்கைகளை அரச தரப்பினர்களுடன் இணைந்து மேற்கொண்டு வருகின்றன.

சிவில் சமூக சேவை அமைப்புக்கள் பொது விவாகாரங்களில் உடனடியாகக் கூடிக் கலைவார்கள் அல்லது அவை பற்றி சமூக ஊடகங்களில் அறிக்கை விடுதல் போன்ற விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்துபவர்களாகவே உள்ளனர். அதற்கு மாறாக யாரைக் கொண்டு பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியுமோ அவர்களிடத்திலே குறித்த விடயம் பற்றி பொறுப்பு சாட்டி தீர்வினைப் பெற்றுக் கொள்ளுகின்ற நடவடிக்கைகளையே வை.எம்.எம்.ஏ இன் தேசிய விவகாரப் பிரிவு மேற்கொண்டு வருகின்றன.

இந்நாட்டில் பொதுவாக முஸ்லிம்களுடைய உரிமைகள் சம்பந்தமான விடயங்களில் இடைக்கிடையே அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவது உண்டு. அந்த அச்சுறுத்தலை விடுக்கின்ற தரப்பினர்களிடத்தில் பிரச்சினைகளை நேரடியாகக் கதைத்து வேற்றுமையில் ஒற்றுமையைக் காணுகின்ற நடவடிக்கைகளை அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய விவகாரங்களுக்கான பிரிவு இதுவரை மேற்கொண்டு வருகிறது. இவ்வாறு மேற்கொள்வதன் காரணமாக புகைந்து எழுந்து வரும் பிரச்சினைகளுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படுவதுடன் இனிமேல் தொடராமல் இருப்பதற்கான வேலைத் திட்டங்களையும் படிப்படியாக முன்னெடுப்பதற்கான காரியங்களை மேற்கொண்டு வருகின்றன என்றார்.



கண்டி உதவி இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் சர்வதேச யோகா தினம் நேற்று கண்டி நகரில் சேஸ் உயன மண்டபத்தில் உயர்ஸ்தானிகர் கலாநிதி எஸ். ஆதிரா தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே கலந்து கொண்டார். அத்துடன் மாவட்டச் செயலாளர் சந்தன தென்னக்கோன், கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாம் செயலாளர் பி. சோமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம் – மாவத்தகம தினகரன் நிருபர்)

# 'செட்ஜிபிடி' என்ற செயற்கை நுண்ணறிவு செயலி உருவாக்கத்தில் சீன நிறுவனங்கள் தீவிரம்

## புதிய கட்டுப்பாடு, விதிமுறைகளை ஏற்படுத்த மேற்கு நாடுகள் முனைப்பு

'செட்ஜிபிடி' என அழைக்கப்படும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பின்புலத்தில் மனிதரைப் போலவே உரையாடி கேள்விகளுக்கு பதில் சொல்லும் செயலி உருவாக்கத்தில் சீன நிறுவனங்கள் அதிக ஆர்வம்காட்டி வருகின்றன. அலிபபா, டென்சென்ட், பைடு, ஹீவாவி போன்ற பெரு தொழில் நிறுவனங்கள் உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இதில் ஈடுபட்டிருப்பதாக சீனத் தகவல்களை ஆதாரம் காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இத்துறையில் தீவிரம் காட்டிவரும் அலிபபா நிறுவனம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் சீனாவில் முன்னணி வகிக்க விரும்புவதாகவும் தெரிகிறது.

ஆக்கநிலை செயற்கை அறிவு தொழில்நுட்பம் சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்காவில் உருவாக்கப்பட்டது. அமெரிக்கா 2020 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் உரையாடக் கூடிய 11 எல்.எல்.எம். செயலிகளை வெளியிட்ட போது சீனா இரண்டை மட்டுமே வெளியிட்டது. 2021 இல் உலகெங்கும் 30 செயலிகள் வெளியிடப்பட்டன.

'செட்ஜிபிடி' தொழில்நுட்பம் பரவலாக பாவனைக்கு வருமானால் பலரது தொழில் வாய்ப்புகள் பறிக்கப்படலாம் என்ற அச்சம் நிலவுகிறது. இச் செயலியால் அந்தந்த நாட்டு மொழியில் உரையாடவும், சிக்கல்களைத் தீர்க்கவும், கணக்குகளை விரைந்து முடிக்கவும், குறியீடுகளை எழுதவும், புதிய படைப்புகளுக்கான மூலங்களை உருவாக்கவும் மற்றும் மொழிமாற்றம், உரைமாற்றம் செய்யவும் முடியும் என்பதால் மனித உழைப்பு அவசியமற்றுப் போகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உலகளாவிய தொழில்நுட்ப தொழில்துறையில் சீனா முக்கிய இடத்தை வகிப்பதால் செயற்கை நுண்ணறிவுத்துறையில் சீனா புதிய உச்சங்களை அடைய முடியுமென்றும், தவறான மற்றும் போலியான தகவல்களை உண்மை போலவே உருவாக்கி உலவவிட முடியுமென்றும் கருதும் மேற்கத்திய நாடுகள், இந்த அபாயத்தில் இருந்து தப்பும் வகையில் செயற்கை நுண்ணறிவுத் துறையில் கட்டுப்பாடுகளை விதிக்கவும், விதிமுறைகளை உருவாக்கவும் முனைந்துள்ளன.

# பாகிஸ்தானில் பொருளாதார, சுகாதார சீர்கேடு காரணமாக பாதிக்கப்பட்டுள்ள சிறார் சமூகம்

பொருளாதார நெருக்கடி, அந்நிய செலாவணி கையிருப்பின்மை போன்ற கடுமையான சிக்கல்களுக்கு உள்ளாகியிருக்கும் பாகிஸ்தானில் போஷாக்கின்மை அதிகரித்து வருவதாகவும் கடந்த வருடம் ஏற்பட்ட மிகக் கடுமையான வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 84 மாவட்டங்களில் போஷாக்கின்மையால் சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மனிதாபிமான உதவிகளுக்கான ஐ.நா.வின் இணைப்பு அலுவலகம் வெளியிட்டிருக்கும் புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மாவட்டங்களில் போஷாக்கின்மை 12 சதவீதமாகக் காணப்படுவதாகவும் 3.5 மில்லியன் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் 1.45 மில்லியன் சிறார்களுக்கு உடல் மெலிவைத் தடுக்கக் கூடிய சத்துணவு அவசியம் எனவும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேசமயம் வெள்ளப்பாதிப்புக்கு ஆளான 43 மாவட்டங்களைச் சேர்ந்த 10.5 மில்லியன் மக்கள் போதிய உணவு கிடைக்காமல் தவிப்பதாகவும் இவர்கள் ஆறு சதவீதமானோர் கடும் நெருக்கடி நிலையிலும், 23 சதவீதமானோர் நெருக்கடி நிலையிலும் காணப்படுவதாக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தொழில் செய்வதற்கான குறைந்தளவு வாய்ப்புகள், உணவு விலை உயர்வு என்பன நெருக்கடி நிலை அதிகரிப்புக்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நவம்பர் முதல் 2024 ஜனவரி முதலான காலப்பகுதியில் நிலைமை மோசமடையும் எனவும் 11.8 மில்லியன் (32 சதவீதம்) மக்கள் மிக மோசமான உணவு பஞ்சத்தை எதிர்கொள்ள நேரிடும் எனவும் இவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

# கிழக்கின் குரல்



## ஜப்பான் சுற்றுலா நடத்துநர்களுடன் கிழக்கு ஆளுநர் கலந்துரையாடல்



ஜப்பானிலுள்ள இலங்கை தூதரகத்தில் ஜப்பானின் மிகப் பெரிய சுற்றுலா நடத்துநர்களுடன் விரிவான கலந்துரையாடல்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மேற்கொண்டார்.

இக் கலந்துரையாடலில் ஜப்பானியர்கள், கிழக்கு மாகாணம் மற்றும் மலையகம் ஆகிய இரண்டு பிராந்தியங்களுக்கு வருமாறு ஆளுநரால் அழைப்பு விடுக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் ஜப்பான் நாட்டில் உள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தலைவர், ஜப்பானுக்கான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் GSA பணிப்பாளர் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இதன் போது கிழக்கு மற்றும் மலையக பகுதிகளை பார்வையிடுவதற்காக சுற்றுலா தளங்களை பரிந்துரை செய்தார்.

கிழக்கில் டால்பின்கள் மற்றும் திமிங்கலங்களைப் பார்வையிடுவது, சர்ஃபிங், ஸ்கூபா டைவிங், பவளப்பாறை படகு சவாரி, வனவிலங்கு சரணாலயம்,பறவைகள் சரணாலயம், மான் நகரம், தொல்லியல் மற்றும் கலாசார தளங்கள், இயற்கை சுற்றுலா தளங்கள்

மலையகம் மலை காட்சிகள், மலையேற்றம் மற்றும் முகாமிடுதல், தேயிலை தொழிற்சாலைகள், உலக முடிவு இயற்கை சுற்றுலா தளம், ஒன்பது வளைவு பாலம், லிப்டன் சீட், நக்கிள்ஸ் மலைத்தொடர்

செந்தில் தொண்டமானின் பரிந்துரைக்கு அமைவாக, ஜப்பானின் சுற்றுலா நடத்துநர்கள் எதிர்வரும் நாட்களில் இலங்கைக்கு வருகை தருவதாக ஒப்புதல் அளித்ததுடன், இலங்கை சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக தமது முழுமையான ஒத்துழைப்பையும் வழங்குவதாக தெரிவித்தனர்.

## 44 மாணவர்கள் இந்தியா பயணம்




**(கல்முனை விசேட நிருபர்)**

சர்வதேச அபாகஸ் போட்டியில் பங்குபற்ற இலங்கையில் இருந்து 44 மாணவரகள் புதன்கிழமை (21) இந்தியாவுக்குப் பயணமானார்கள்.

இந்தியவின் சென்னையில் எதிர்வரும் 25ஆம் திகதி இந்த சர்வதேச அபாகஸ் போட்டி இடம்பெறவுள்ளது.

ஐகேம் அபாகஸ் ( ICAM Abacus) நிறுவனத்தின் 07 ஆவது தேசிய அபாகஸ் போட்டியில் சித்தியடைந்த மாணவர்களில், 44 பேரே இவ்வாறு இலங்கையில் இருந்து சென்றுள்ளனர். கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இன்று இவர்கள் வழியனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்களுள் சாய்ந்தமருது தாறுல் இல்மு கல்வி நிலைய மாணவர்கள் 4 பேர் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கது.

## அஸ்– ஸிறாஜ் வித்தியாலய நுழைவாயில் திறந்து வைப்பு



**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**

அக்கரைப்பற்று அஸ் ஸிறாஜ் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினால் 2.3 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுற்று மதிலும், நுழைவாயிலும் திறந்து வைக்கும் நிகழ்வு, புதன்கிழமை (21) அதிபர் ஏ.ஜீ.பஸ்மில் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். றஹ்மத்துல்லாஹ்வினால் சுற்று மதிலும், நுழைவாயிலும் திறந்து வைக்கப்பட்டு நினைவுப்படிகமும் திரைநீக்கம் செய்யபட்டது.

நிகழ்வின் பிரதம அதிதி தனது உரையில், இந்தப் பணியினை மனமுவந்து செய்த எமது பழைய மாணவர்களுக்கு இறைவனின் நற்கூலி கிடைக்க வேண்டும் என பிரார்த்தித்தார்.

இந் நிகழ்வில், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மாடுகளை அறுப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

**(ஒலுவில் விசேட நிருபர்)**

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் சுகாதார வைத்தியதிகாரிகளின் அனுமதி இல்லாமல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் உணவுக்காக மாடுகளை அறுப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் உணவிற்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும், எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு உழ்ஹிய்யா வழங்குவதற்காக மாடுகளை அறுப்பது தொடர்பிலும் தீர்மானிப்பதற்கான விசேட கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (20) பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் ஹஜ் பெருநாளை முன்னிட்டு ஆடு, மாடுகளை அறுப்பதற்கான விசேட பொறிமுறைகளை வகுத்து செயல்படுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

குறிப்பாக சுகாதார வைத்திய அதிகாரிகள் தத்தமது பிரதேசங்களில் மாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்ப் பரவலின் தன்மை மற்றும் ஏனைய சுகாதார நடைமுறைகளை கவனத்திற் கொண்டு பிரதேச உலமா சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பங்களிப்புடன் விசேட தீர்மானங்களை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

## பார்வை இழந்த நோயாளிக்கு உணவூட்டும் இராணுவ வீரர்

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**

திருகோணமலை மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் பார்வை இழந்த நோயாளியொருவர் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் இராணுவ வீரர் அவருக்கு உணவு ஊட்டுவதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மஹதிவுல்வெவ புபுதுபுர பகுதியில் வசித்து வரும் அமரசிங்க (67 வயது) என்பவர் பல வருடங்களாக பார்வை இழந்து மனைவியை விட்டு பிரிந்து தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்துள்ளார். இவர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில், அதே பகுதியில் வசித்து வரும் மல்லாவி, ஆலங்குளம் 17 CLI இராணுவ முகாமில் வசித்து வரும் தனுஷ்க பியலால் திசாநாயக்க (34 வயது) இராணுவ வீரர் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் வயோதிபரை பார்வையிடுவதற்காக வீட்டில் இருந்து அவருடைய உறவினர்கள் வருவதற்கு தாமதம் ஏற்படுவதால், இராணுவ வீரர் தமது தந்தைக்கு செய்யும் பணிவிடை போல இவ் வயோதிபருக்கு பணிவிடை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சு.க. அமைப்பாளர் ஐ.தே.கவில் இணைவு

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**



ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளரும், ஊடகவியலாளருமான ஐ.எச்.ஏ.வஹாப் ஐக்கிய தேசிய கட்சியில் திங்கட்கிழமை (19) இணைந்து கொண்டார்.

இவர், அக்கட்சியின் புதிய அங்கத்துவத்தை கட்சியின் செயலாளர் நாயகம் பாலித்த ரங்க பண்டார முன்னிலையில் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து பெற்றுக் கொண்டார். அத்தோடு அக்கரைப்பற்று மாநகர மற்றும் பிரதேச சபை பகுதிகளுக்கான கட்சியின் அமைப்பாளராகவும் இவர் கட்சியின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதான அமைப்பாளர் யூ.கே.ஆதம் லெப்பையும் கலந்து கொண்டார்.

## மட்டக்களப்பு மாவட்ட அரச ஊழியர்களுக்கு யோகா பயிற்சி

**(கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)**



சர்வதேச யோகா தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு யோகா பயிற்சி நிகழ்வொன்று மாவட்ட செயலகத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் தலைமையில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் புதன்கிழமை (21) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனூடாக மாவட்ட செயலக அரச உத்தியோகத்தர்கள் யோகா கலை தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்வதுடன், தமது வாழ்வில் யோகா பயிற்சியினை பிரயோகப்படுத்தி பயன் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

இந் நிகழ்வில் அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா உரையாற்றுகையில், யோகா கலையின் சிறப்புக்கள் மற்றும் இதனூடாக மனிதர்கள் பெற்றுக் கொள்ளும் பயன்கள் தொடர்பாக தெளிவுபடுத்தினார்.

இதுதவிர உத்தியோகத்தர்களுக்கான யோகா உடற்பயிற்சியினை மண்முனைப்பற்று பிரதேச செயலக கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர் கே. ராஜன் நடாத்திவைத்தார்.

இந் நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், புதுக்குடியிருப்பு ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய நிபுணர் டாக்டர். கிரிசாந்த், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணன் உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மட்டக்களப்பு மாநகர சபை உத்தியோகத்தர்கள் என பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

## குழாய் வெடித்து நீர் வீண் விரயம்

**(கந்தளாய் தினகரன் நிருபர்)**

கந்தளாய் நீர் வழங்கல் பாவனையாளர் அலுவல்கள் பிரிவுக்குட்பட்ட, திருகோணமலை கண்டி பிரதான வீதியில் குடிநீர் குழாய் வெடித்து நான்கு வருடமாக நீர் விரையமாகி கொண்டிருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பேராற்றுவெளி பழைய பலநோக்கு கூட்டுறவு நிலைய முன்னால் உள்ள பிரதான வீதியினூடாக செல்லும், இப் பிரதான குழாய் நீர் வெடித்துள்ளதால் குடிநீர் வீண் விரையமாகி வருகின்றது.

இவை தொடர்பாக கந்தளாய் நீர்ப்பாசன அலுவலகத்திற்கு பல முறை எழுத்து மூலம் அறிவித்தும் எந்த வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வில்லை மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## நாய்களுக்கு விசர் தடை தடுப்பூசி மருந்து

**(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)**

களுவாஞ்சிக்குடி பொது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள கிராமங்களில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் சேவை நடைபெற்று வருகிறது. இதற்கமைய கடந்த இரு தினங்களாக களுதாவளை கிராமத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர் தடை தடுப்பூசி மருந்து இலவசமாக ஏற்றப்பட்டு வருகின்றது.

இந் நாட்களில் நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக சுகாதார பிரிவினர் சுட்டிக் காட்டுகின்றனர். இதனால் நாய் வளர்ப்பார்கள் தவறாமல் இத் தடுப்பூசியை நாய்களுக்கு ஏற்றிக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கடந்த திங்கட்கிழமை களுதாவளை பொதுச் சுகாதார பிரிவில் உள்ள காணி ஒன்றில் இறந்த நிலையில் காணப்பட்ட நாயின் உடற்பாகம் கண்டெடுக்கப்பட்டது. குறித்த நாய் (நீர் வெறுப்பு) நோய் ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளதாக விலங்கு விசர் தடை இயக்கப் பிரிவு தெரிவித்துள்ளது.

கவனிப்பாரற்று அலைந்து திரியும் நாய்கள்தான் ஆபத்தானவை என களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தெரிவித்துள்ளது.

## உழ்ஹிய்யா மாடுகளை வீடுகளில் அறுக்க அனுமதி மறுப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

உழ்ஹிய்யா மாடுகளை வீடுகளில் அறுப்பதற்கு காத்தான்குடி நகர சபை அனுமதி வழங்காது என, நகர சபை பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

உழ்ஹிய்யா மாடுகளை வீடுகளில் அறுப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு அவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ளது.

உழ்ஹிய்யா மாடு அறுத்தல் தொடர்பாக காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளதாவது, ஹஜ் பெருநாள் காலத்தினை தேக ஆரோக்கியத்துடனும் சந்தோஷமாகவும் கொண்டாட நகரசபை சார்பாக அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.நாடு பூராகவும் மாடுகளுக்கு பரவி வருகின்ற ஒருவித நோய் தொடர்பில் மக்களை அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் முறையாக உரிய அதிகாரிகளினால் பரிசோதனைக்குட்படுத்தி நகர சபை மடுவத்தில் அறுவை செய்யும் மாட்டு இறைச்சிகளினையே நுகருமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

அந்த வகையில் இம்முறை உழ்ஹிய்யா மாடுகளை வீடுகளில் அறுப்பதனை கட்டாயம் தவிர்த்துக் கொள்ளுமாறு அதற்காக சபையினால் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## காட்டு யானை அட்டகாசம்

**(திருக்கோவில் தினகரன் நிருபர்)**



திருக்கோவில் 04 மண்டானை கிராமத்திற்குள் நேற்று அதிகாலை காட்டு யானை புகுந்து அட்டகாசம் செய்துள்ளதுடன், வீடு மற்றும் பயிர்கள் என்பன வற்றையும் நாசம் செய்துள்ளதுடன், வீட்டில் உறங்கிக் கொண்டு இருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு உயிர் தப்பியதாக வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

அதிகாலை கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானை வேலியினை உடைத்துக் கொண்டு, வீட்டின் சுவரை உடைத்து வீட்டுக்குள் இருந்த அரிசியை சாப்பிட்டுள்ளதுடன், முற்றத்தில் நடப்பட்டு இருந்த மரவள்ளி, வாழை பேன்ற பயிர்களையும் நாசம் செய்துள்ளது.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வந்த கிராம சேவையாளர், மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பார்வையிட்டு சேதம் தொடர்பான அறிக்கையினை, திருக்கோவில் பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தி இருந்ததுடன், இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை துறைசார் அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஏறாவூர் கோட்ட பாடசாலைகளுக்கு இடையில் தமிழ்த்தின போட்டி

**(ஏறாவூர் சுழற்சி நிருபர்)**

ஏறாவூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான பிரதேச மட்ட தமிழ் மொழித்தின போட்டிகளில், ஏறாவூர் பசீர் சேகுதாவூத் வித்தியாலயம் எல்லா போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளதாக பாடசாலை அதிபர் ஏ.எல்.பாறுக் தெரிவித்தார்.

நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற பசீர் சேகுதாவூத் வித்தியாலய மாணவர்களின் விபரங்கள்,

ஆக்கத்திறன் போட்டியில் எம்.எச். ஹனஸ் அகமட் முதலாம் இடத்தினையும், வாசிப்பு போட்டியில் எஸ்.எப். றிஹ்மா முதலாம் இடத்தினையும், இசையும் அசைவும் போட்டியில் எப்.எப். றுசைதா முதலாம் இடத்தினையும் நாட்டார் பாடல் போட்டியில் ஏ. முப்தி அஹமட், ஐ.எப். இமானி, எப்.எப். ஹனியா, என்.எப். ஸஹ்றா, என். எப். சலிஹத், எம்.எப். அலிஸ்பா ஆயோர் குழுவாக பங்கு பற்றி முதலாம் இடத்தினையும், ஆக்கம் எழுத்து போட்டியில் ஏ.டபிள்யூ. எப். ஸஹா இரண்டாம் இடத்தினையும், பாவோதல் போட்டியில் டபிள்யூ.கே.செய்னப் ரீமா மூன்றாம் இடத்தினையும், மற்றும் பேச்சு போட்டியில் எம்.ஏ.எப்.றுக்ஸா மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

**பெயர் மாற்றம்**

228/2, தஹம் மாவத்த, கோனவல வீதி, களனி என்ற முகவரியில் வசிக்கும் தஸநாயக்க கார்தியெல் அப்புஹாமிலாகே நிஷாந்த தசநாயக்க ஆகிய நான் இதன் பிறகு தஸநாயக்க கார்தியெல் அப்புஹாமிகே என்று பாவிப்பதாக இலங்கை குடியரசுக்கும் மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

0777855851


Repeat Your ad For Better Offers

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk


# இலங்கை துறைமுக அதிகாரசபை

## பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்கு வேண்டப்படும் தகைமைகளையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. கடல் நிர்மாண அலுவலர் பதவி (மத்திய முகாமைத்துவ முதலாம் மட்டம்) (MARITIME CONSTRUCTION OFFICER)

**(அ) தகுதித்திறன்**

மஹபொல துறைமுக மற்றும் கடல்சார் கலாசாலையினால் வழங்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட கப்பல் சுழியோடி சான்றிதழ்.

**அத்துடன்**

**அனுபவம்**

உரிய துறையில் ஐந்து (05) வருட முனைப்பான அனுபவம் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**

(அ) நீருக்கடியிலான நிர்மாண மற்றும் சுழியோடி வேலை தொடர்பான மதிப்பீடு தயாரித்தல் மற்றும் சுழியோடி பரீட்சிப்பு அறிக்கை தயாரிக்கும் ஆற்றல் இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் மற்றும் சிறந்த கட்புலன் மற்றும் செவிப்புலனையுடையவராக இருத்தல் வேண்டும். (மருத்துவ பரிசோதனையொன்றிற்கு தோற்றுதல் வேண்டும்.)

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 4 1 (MLM 1)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 74,120/=
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1380/=
கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ.148,400 அளவினதாக இருக்கும்.

### 02. கடலக மற்றும் சேறுவாரிக் கல அதிபர் பதவி (மத்திய முகாமைத்துவ இரண்டாம் மட்டம்) (NAVIGATION AND DREDGING MASTER)

**(அ) தகுதித்திறன்**

மொத்த நிறை 3000 தொன்னுக்குக் குறையாத கரையோர கடற் பயணங்களில் ஈடுபடும் கப்பல்களில் கல அதிபராக சேவையிலீடுபடுவதற்கு இலங்கை வணிக கப்பல் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட அதற்கு சமனான சான்றிதழ்.

**அல்லது**

பணிப்பாளரினால் (வணிகக் கப்பல்) வழங்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது அவுஸ்திரேலிய அல்லது இந்திய அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட வேறு உயர் மட்டத்திலான தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

**அனுபவம்**

இரண்டு (02) வருட உரிய கடற் பயண அனுபவம் பெற்றிருத்தல்.

**(ஆ) சம்பளம்**

சம்பள வகையீடு : 4:2 (MLM 2)
ஆரம்பச் சம்பளம் : ரூ. 66,005/=
வருடாந்த சம்பள ஏற்றம் : ரூ. 1,265/=
கொடுப்பனவுகள் அடங்கலாக மாதாந்த மொத்தச் சம்பளம் ரூ.140,000 அளவினதாக இருக்கும்)

**குறிப்பு 11**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் 45 வயதை விடக் குறைந்தவராக இருத்தல் வேண்டும். (இவ்வயதெல்லை அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்புடையதல்ல)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையில் ஏற்கனவே விதிக்கப்பட்ட அல்லது எதிர் காலத்தில் விதிக்கப்படக் கூடிய சகல சட்ட திட்டங்களுக்குமிணங்க நியமனம் பெறுபவர்கள் செயற்படுதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பகுதியிலும் அல்லது அதிகாரசபையின் எந்தவொரு பகுதி/பிரிவில் சேவை புரிய உட்படுவர்.

விண்ணப்பங்கள் வயது, கல்வி, தொழில் தகைமைகள், அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் "பிரதான மனிதவள முகாமையாளர், இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு -13" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக 2023.07.11ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சலில் **(slpahrex@slpa.lk)** அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

இந்த அறிவித்தல் **www.slpa.lk** என்ற இணையத் தளத்திலும் பிரசுரிக்கப்படும்.

அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களம் / கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலே பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்கள / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் அதில் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**

# கேள்வி கோரல்

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் பொறியியல் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுவினால் கீழ்க்காணும் வேலைகளுக்காக உள்ளூர் கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | | | D |
|---|---|---|---|---|---|
| வேலை விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக வேண்டிய காலம் (விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில்) | | | கேள்வி ஆவணம் மற்றும் நிர்வாக கட்டணம் |
| | | வங்கிப் பிணை மூலமாயின் | காசாக | பிணை செல்லுபடியாகும் காலம் | |
| 70 KW சூரிய சக்தி அமைப்பை ஸ்தாபித்தல் கன்றுகள் மரபனு வள நிலையம் கன்னொருவ | ENG/ES/EM/1/PR/17/2023 | ரூ. 300,000.00 | ரூ. 150,000.00 | 2023.10.12 | ரூ. 7500.00 |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு ரூ. 7500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் காசாக செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விவசாயத் திணைக்களத்தின் பொறியியல் பிரிவில் பிரதம பொறியியலாளரிடம் சமர்ப்பித்து 2023.06.22 முதல் 2023.07.12 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட சகல கேள்விகளையும் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பொறியியல் பிரிவு, விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

கேள்விதாரர்கள் வங்கிப் பிணை மூலம் கேள்விகளை வைப்பின் அதனை இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2023.07.13 மு.ப. 10.30 இற்கு முடிவடைவதுடன் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விகளை சமர்ப்பித்தோர் அல்லது அவர்களது எழுத்து மூல அதிகாரமுடைய பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். இதனோடு சம்பந்தப்பட்ட கேள்விக்கு முன்னரான கூட்டம் (Pre Bid Meeting) 2023.06.28 மு.ப. 9.30 இற்கு கன்னொருவ கன்றுகள் மரபனு வள நிலையத்தில் நடைபெறும்.

கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் கேள்விதாரர்கள் அதற்கு சமுகமளித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பொறியியல் பிரதேச பெறுகைக் குழு.**


* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377


# தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

NLDB

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

## புத்தம் புதிய பசும்பாலின் விற்பனை

2023 ஒகஸ்ட் 1 ஆம் திகதியிலிருந்து 2023 ஒக்டோபர் 31 ஆம் திகதியன்று வரையுமான கால எல்லைக்கு கீழே குறிப்பிட்டுள்ள பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட புத்தம் புதிய பாலை விற்பனை செய்வதற்காக உள்ளூர் கொள்வனவுக்காரர்/கம்பனிகளிடமிருந்து கொழும்பு-05, நாராஹேன்பிட்ட, நாவல வீதி, 40 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| பண்ணை | நாளொன்றிற்கான ஆகக்கூடிய பால் (லீட்டர்களில்) | பண்ணை | நாளொன்றிற்கான ஆகக்கூடிய பால் (லீட்டர்களில்) |
|---|---|---|---|
| ரிதியகம பண்ணை, அம்பலாந்தொட்ட | 5,000 | கல்பொக்குண பண்ணை, உடுபத்தாவ | 100 |
| மெனிக்பாலம பண்ணை, போப்பத்தலாவ | 2,800 | ருக்கத்தன பண்ணை, பிங்கிரிய | 200 |
| டயகம பண்ணை, டயகம | 1,200 | நாரங்கல பண்ணை, கிதலவ | 200 |
| போப்பத்தலாவ பண்ணை, போப்பத்தலாவ | 2,000 | சிரிங்கபாத்த பண்ணை, படல்கம | 100 |
| கவுல்வெவ பண்ணை, நாரம்மல | 400 | நிகவரட்டிய பண்ணை, நிகவரட்டிய | 100 |
| மெல்சிரிபுர பண்ணை, மெல்சிரிபுர | 100 | ஓயாமடுவ பண்ணை, அலயவத்துவ | 50 |
| மஹாபெரதன்ன பண்ணை, திகண | 100 | --------------------- | --------------------- |
| ஆண்டிகம பண்ணை, தம்பதெனிய | 500 | --------------------- | --------------------- |

ஆர்வமுள்ள கொள்வனவுக்காரர் தேபவிஅச தலைமை அலுவலக சந்தைப்படுத்தல் பிரிவை அல்லது மேலேயுள்ள எந்தவொரு பண்ணை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான விலைமனுக்கோரல் ஆவணத்தை பெற்றுக் கொள்ளலாம். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் ''தலைவர், பெறுகைக் குழு, தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை, இல. 40, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05 என முகவரியிடப்பட்டு 2023 ஜூலை 7 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் **"Bids for Purchasing Fresh Milk"** என தயவு செய்து குறிப்பிடவும். விலைமனுக்கள் அதே நாளில் அதே இடத்தில் பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்படும்.

அனைத்து விபரங்களும் நிபந்தனைகளும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை,**
**இல.: 40, நாராஹேன்பிட்ட வீதி,**
**கொழும்பு-05.**

**011-2501701/2, 0773782127 (சந்தைப்படுத்தல் முகாமையாளர்)**

# கொழும்பு மாநகர சபை

## விலைமனு கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/DN/48/2023 | தும்முல்ல பிரதேசத்திலுள்ள மூன்றாம் நிலை வடிகால்களை மேம்படுத்துதல் (2ஆம் கட்டம்) | 5,750.00 | 2,000,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C 04 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்ட மழை நீரை அப்புறப்படுத்தும் நில வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 2 | ME/ME/DR/54/2023 | கொழும்பு-14, பெர்குஸன் வீதி, G 75ஆம் இலக்கத்தின் வடிகாலமைப்பு முறைமைக்கான திருத்தவேலைகள் | 5,750.00 | 600,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C 05 மற்றும் C 04 CIDA தரத்தைக் கொண்ட மழை நீரை அப்புறப்படுத்தும் நில வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 3 | ME/ME/ML/57/2023 | கொழும்பு நகர எல்லைக்குள் உள்ள வீதிகளை அளத்தல் - 2023 | 5,750.00 | வரிகள் இன்றி மொத்த விலைக் கோரல் தொகையின் 2% நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | தனிப்பட்ட கொள்ளவைக் கொண்ட நிறுவனத்தின் கீழுள்ள நிறுவனம் அல்லது உத்தரவுபெற்ற நிலை அளவையாளர் | பொறியியல் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து** (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- **வட்டார அலுவலகம் 04,** இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
- **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு,** மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணைய தளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@Colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2023-07-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2023-07-12ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2024.02.08ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2024.01.09ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-07-13ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2023-07-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/LP/23/ PT/01/056 | Asphalt Concrete Wearing Coarse without transport | 25,000.00 | 1,000.00 | 2023.07.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/054 | 3600 KGS/ Grease EP-2 | 120,000.00 | 3,500.00 | 2023.07.13 ஆம் திகதியன்று பி.ப.1.30 மணிக்கு |
| CES/LP/23/ PT/17/056 | 42840 Liters Diesel Engine Oil SAE 15 W – 40 CI - 4 | 459,000.00 | 3,500.00 | 2023.07.13 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 ஜுன் 23ஆம் திகதியிலிருந்து 4ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்) ,**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு - 01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வணிக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

**படல்கம பஸ்தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் ஸ்ரீ சங்கமித்தா பாலிகா வித்தியாலயத்தின் கூரையை நிர்மாணிப்பதற்குத் தேவையான பதார்த்தங்களிற்காக விலைமனுக்கோரல்**

**விலைமனு இலக்கம் :- PRDA/WP/PRO/2023/40**

இவ் அதிகார சபையின் கீழ்க் காணப்படும் கொள்வனவுகளை மேற்கொள்வதற்காக, இவ்வாறான வழங்கல்களில் ஈடுபாடுடைய, அங்கீகாரம் பெற்ற வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக் கோரப்படுகின்றது.

**(01) படல்கம பஸ்தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான பதார்த்தங்கள்:-**

| உருப்படி இலக்கம் | பண்டங்களின் விபரம் | அலகு | எண்ணிக்கை | விலைமனுப் பிணைத் தொகை | விலைமனு பிணையம் வங்கி/ காப்புறுதி |
|---|---|---|---|---|---|
| 1 | Cement | Bags | 341 | 14,000.00 | 28,000.00 |
| 2 | River Sand | Cube | 15.5 | | |
| 3 | 1 1/2" Metal | Cube | 8.1 | | |
| 4 | 3/4" Metal | Cube | 5.6 | | |
| 5 | 6"x9" Bubble | Cube | 27 | | |
| 6 | 9"x4 1/2"x3" Size Bricks | Nos | 6829 | | |
| 7 | 12"x24" Size Poreelain mat Tiles | Nos | 166 | | |
| 8 | Weather Shield Paint | Ltr | 46 | | |
| 9 | Steel | | | | |
| (i) | 6 mm dia. Mild Steel | Kg | 240 | | |
| (ii) | 10 mm dia. Tor Steel | Kg | 84 | | |
| (iii) | 12 mm dia. Tor Steel | Kg | 589 | | |
| (iv) | 16 mm dia. Tor Steel | Kg | 286 | | |
| (v) | Binding Wires | Kg | 1000 | | |

**(02) ஸ்ரீ சங்கமித்தா பாலிகா வித்தியாலயத்தின் கூரையை நிர்மாணிப்பதற்கான பதார்த்தங்களை வழங்கல்:-**

| உருப்படி இலக்கம் | பண்டங்களின் விபரம் | அலகு | எண்ணிக்கை | விலைமனு பிணையம் (காசாக) | விலைமனு பிணையம் வங்கி/ காப்புறுதி |
|---|---|---|---|---|---|
| 1 | Supply for Corrugated Asbestor Roofing Sheets (2500mm x 1050mm (8'-0") | Nr | 75 | 7,000.00 | 14,000.00 |
| 2 | Supply for Corrugated Asbestor Roofing Sheets (3500mm x 1050mm (12'-0") | Nr | 75 | | |
| 3 | Supply for Corrugated Asbestor Ceiling Sheets (1200mm x 1200mm (4'-0") x (4'-0") | Nr | 216 | | |

02. 2023.06.22 முதல் 2023.07.06 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 02.30 வரை இவ் அதிகார சபையின் பெறுகைப்பிரிவில் இதற்கான விலைமனுப் படிவத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விலைமனுப் பிணையை காசாக, பெறுகைப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கமைவாக மேற்படி பெறுமானத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. (இவ் அதிகார சபையில் பதிவு செய்யப்பெற்றுள்ள வழங்குநர்கள் தவிர்ந்த) ஏனைய வழங்குநர்கள் ரூபா 1,150.00 ஐச் செலுத்தி இதற்கான விலைமனுப்படிவத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
04. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல், 2023.07.07 அன்று பி.ப. 2.30 இற்கு இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**மாகாண விதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12.**
**தொ.பே.இல. : 011-4849825 - 011-4849845**

# விலை மனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனு கோரல் முடிவுதிகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே.இலக்கமும் | விலைமனு ஆவணவிலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| சேவைகள் | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/085<br>வாடகைக்கு கார் - (பிரதேச பிரதம மின் பொறியியலாளர் (இரண்டு வருடகாலம்) | 05-07-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், (மட்டக்களப்பு)<br>065-2222639<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/086<br>வாடகைக்குவான் - மின் அத்தியட்சகர் (அலுவலகம்)- பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், திருகோணமலை (இரண்டு வருடகாலம்) | 05-07-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், திருகோணமலை<br>026-2222301<br>அல்லது பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/087<br>வாடகைக்குவான் - மின் அத்தியட்சகர் (ஏறாவூர்/செங்கலடி)- மின் பாவனையாளர் சேவை நிலையம்) - வாழைச்சேனை (இரண்டு வருடகாலம்) | 05-07-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேசமின் பொறியியலாளர் அலுவலகம், வாழைச்சேனை<br>065-2258882<br>அல்லது<br>பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/088<br>வாடகைக்குவான் - மின் அத்தியட்சகர் (சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையம்) - கல்முனை (இரண்டு வருடகாலம்) | 05-07-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், கல்முனை<br>067-2229276<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/089<br>வாடகைக்குவான் - மின் அத்தியட்சகர் (தெகியத்தகண்டியின் மின் பாவனையாளர் சேவை நிலையம்) - அம்பாறை (இரண்டு வருடகாலம்) | 05-07-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை<br>063-2222387, 063-2222078<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 51000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | DGM(E)/QPPC/23/90<br>வாடகைக்கு வான் - மின் அத்தியட்சகர் (பொத்துவில் மின் பாவனையாளர் சேவை நிலையம்)- அம்பாறை (இரண்டு வருடகாலம்) | 05-07-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேசமின் பொறியியலாளர் அலுவலகம்,வாழைச்சேனை<br>065-2258882<br>அல்லது<br>பிரதிப் பொதுமுகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை<br>026-2222666, 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித்தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவுசெய்து கொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு.'.பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப் பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/ பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை. பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**மின்சாரத்தை சேமித்து பணத்தையும் சேமிப்போம்**

**பொது முகாமையாளர்**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**101 சொகுசு வாகனங்கள் விற்பனைக்கு**

WP KG-9652 MERCEDES BENZ 2007, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1454295 8. 037971

**109 மிற்சுபிஸி கார்கள் விற்பனைக்கு**

WP GB-7352 MITSUBISHI LANCER 1997, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8. 037984

**110 மாருதி கார்கள் விற்பனைக்கு**

SP KN-5446 MARUTI A-STAR 2011, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 1 2 1 081 0. 037986

**113 சுசுகி கார்கள் விற்பனைக்கு**

SG CAK - 9195 SUZUKI ALTO 2015, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0. 037975

**117 வேன்கள் விற்பனைக்கு**

WP NB-0942 MICRO TOURER 2011, VAN அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071 4 5 4 295 8. 037978

53- 0 8 0 0 TOYOTA HIACE 1988, VAN அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1454295 8. 037992

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

SP PW-1157 FOTON LORRY 2013, அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8. 037988

WP LH-8380 ASHOK LEYLAND COMET TIPPER 2010 அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8. 037985

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

NC QJ-3383 BAJAJ 2007, UP YB-2689 BAJAJ 2010, WP HA-623 1 BAJAJ 2002, NW AA V-1206 BAJAJ 2 014, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07 1121081 0. 037970

SP AAN-9484 TVS KING 2014, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 070599916 3. 037994

WP BHF-3436 YAMAHA RAY ZR 2018, MOTOR CYCLE அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 070599916 3. 037979

SUNDAY OBSERVER adz வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| ரூ. 800/- (Except Thinakaran Varamanjari) | ரூ.1,000/- (Except Thinakaran Varamanjari) | ரூ.1,330/- |

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446 Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404 Kotikawatte Junction, Kudabuthgamuwa

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968 267, Godagama Road

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770 West Town, Bake House, Sweet House

BORALESGAMUWA 071 6505533, 011 2519954 No. 17, Wewa Rd

HANWELLA 011 4967962, 011 4967960 Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama

HOKANDARA 071 8685437 No. 501, North Hokandara

HOMAGAMA 011 2892262, 077 7304046 "Aradanas", Senanayake Shopping Complex, Station Road

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்ட நகைகளின் பொது ஏல விற்பனை

### மக்கள் வங்கி கொழும்பு வடக்கு பிராந்திய தலைமைக் காரியாலயம்

மக்கள் வங்கி கொழும்பு வடக்கு பிராந்தியத்துக்கு உட்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டதும் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகள் வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள திகதிகளில் பொது ஏல விற்பனை செய்யப்படும்.

**இந்த ஏல விற்பனை ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.**

| கிளைகள் மற்றும் சேவை மையங்கள் | இந்த திகதி வரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத நகைகள் | ஏல விற்பனை நிகழும் திகதிகள் | ஏல விற்பனை நிகழும் இடங்கள் |
|---|---|---|---|
| **கிளைகள்**<br>டியூக் வீதி, ப.்.ஸ்ட் சிட்டி ஸ்ரீ சங்கராஜ மாவத்தை தெமட்டகொட, கிராண்ட்பாஸ், புறக்கோட்டை, மிட்சிட்டி முகத்துவாரம், கெஹெல்வத்த ஒல்கொட் மாவத்தை, செட்டித்தெரு, டாம் வீதி, சென்ட்ரல் வீதி, கொட்டாஞ்சேனை, மல்வத்தை வீதி<br>**சேவை மையங்கள்**<br>கொழும்பு துறைமுகம் SC, மாளிகாவத்தை SC, தெமட்டகொட SC, கிராண்ட்பாஸ் SC, புனித ஜோசப் SC, நாகலகம் SC, முத்துவெல்ல SC, மிஹிந்து மாவத்தை SC, ஜம்பெட்டா வீதி SC, புளுமெண்டால் வீதி SC | 2023.07.21 | 2023.07.22 & 2023.07.23 | டியூக் வீதி |

இந்த ஏல விற்பனையில் பங்குபெறுவோர் தமது தேசிய அடையாள அட்டையைக் (NIC) கொண்டு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம் (கொழும்பு வடக்கு)**
**இல.11, டியூக் வீதி, கொழும்பு 01 தொலைபேசி இல. 011-2344982 - 5**

PEOPLE'S BANK Pride of the Nation

## மக்கள் வங்கி

## பிராந்திய தலைமைக் காரியாலயம் - குருநாகல்

மக்கள் வங்கி குருநாகல் பிராந்திய தலைமை காரியாலயத்துக்கு உட்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் / சேவை மையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட 21.07.2023 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள தேதிகள் மற்றும் இடங்களில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் -22.07.05.2023 மற்றும் 23.07.2023**

| ஏல விற்பனை நிகழும் இடங்கள் | குருநாகல் - 012 | குளியாப்பிட்டிய - 028 | வாரியப்பொல - 163 | இப்பாகமுவ - 207 |
|---|---|---|---|---|
| **கிளைகள்** | குருநாகல், மலியதேவ, எதுகல்புர, பொல்கஹவெல, அளவ்வ, பொத்துஹெர | குளியாப்பிட்டிய, நாரம்மல, ஹெட்டிபொல, கிரியுல்ல, மாகந்துர, பிங்கிரிய | வாரியப்பொல, நிகவெரட்டிய, மாஹோ, கல்கமுவ, கோபேகனே | இப்பாகமுவ, பொல்பித்திகம, மெல்சிறிபுர, ரிதீகம, மாவத்தகம |
| **சேவை மையங்கள்** | மருத்துவமனைப் பிரிவு, M.C.பிரிவு, மலியதேவ, பிதுருவெல்ல, ஹிரிபிட்டிய, மல்லவபிட்டிய, கொடவெல, போயவலன, மாதவ | தும்மலசூரிய, உடுபத்தாவ, பிஹெல்பொல, கந்தனேகெதர, கட்டுப்பொத்த, பண்டாரகொஸ்வத்த, பம்மன்ன, தம்பதெனிய, பன்னல, வீரபொகுன | மஸ்பொத்த, நிகவெரட்டிய, ரஸ்நாயக்கபுர, கிரில்ல, நாகொல்லாகம, அம்பன்பொல, பொரலுவெவ | கும்புக்கடே, பானகமுவ, தொடம்கஸ்லந்த, பரகஹதெனிய |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய, ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்ற, ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர்
பிராந்திய தலைமைக் காரியாலயம்
குருநாகல்
இல. 03, வத்ஹிமி வீதி
குருநாகல்
தொலைபேசி இல. 037-2222572, 037-2222453, 037-2224638

PEOPLE'S BANK Pride of the Nation

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### கொழும்பு துறைமுகத்தில் விஜய இளவரசன் நுழைவாயிலில் (PVQ) மேற்பரப்பு மீள்பதித்தல் மீதி வேலைகள் - II ஆம் கட்டம்

### (Contract No.: SLPA/CD/PVQ/04)

01. **SLPA/CD/PVQ/04** என்ற ஒப்பந்த இலக்கத்தின் கீழ் ''கொழும்பு துறைமுகத்தில் விஜய இளவரசன் நுழைவாயில் **(PVQ)** மேற்பரப்பு மீள்பதித்தல் மீதி வேலைகளுக்காக (**Phase II)** தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் செயலாளரின் சார்பாக, துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின், அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். இந்த ஒப்பந்தத்தின் கீழான வேலையானது பிரதானமாக அஸ்பால்ட் பாதை மற்றும் சேவை நடைபாதை ஆகியவற்றின் திருத்தங்கள் மற்றும் மேற்பரப்பு மீள்பதித்தல் ஆகியவற்றை அடக்கியுள்ளது.
02. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - விலைமனுதாரர் வீதி நிர்மாணத்தில் விஷேடத்துவம் பெற்ற சி-3 அல்லது சி-2 தரப் பதிவு ஒப்பந்தக்காரர்களாக **CIDA (ICTAD** என முன்பு அழைக்கப்பட்டது) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் 8 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தன்மையிலுள்ள eroc.drc.gov.lk என்ற இணையதள ஒன்லையினில் விண்ணப்பிக்கும் விலைமனுதாரரினால் பெற்றுக் கொண்ட சான்றிதழ்.
03. கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, தொழில்நுட்ப நூலகத்தில் 2023.07.04 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து தளவிஜயமும் நடைபெறும்.
04. 2023.06.27 ஆம் திகதியிலிருந்து 2023.07.25 ஆம் திகதி வரையும் (இரு நாட்களும் அடங்கலாக) வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புக்கள், ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புக்கள் பிரிவு, இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, இல.: 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01 இலுள்ள பிரதான பொறியியலாளரினால் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான 35,000 ரூபாவை (பெசேவ அடங்கலானது) செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்கள் வழங்கப்படும். அதே அலுவலகத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
05. விலைமனுக்கள் 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
06. விலைமனுக்கோரல் ஆவணங்கள் பாதுகாப்புள்ள முத்திரையிடப்பட்ட தபாலுறையொன்றில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் "**Balance Paving works at Prince Vijaya Quay in Port of Colombo – Phase II (Contract No.: SLPA/CD/PVQ/04)** என அடையாளமிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர்- அமைச்சு பெறுகைக் குழு, துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழம்பு-01 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
07. அனைத்து விலைமனுக்களும் 2,600,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023.12.21 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
08. வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நேர சட்டகமானது 240 நாட்களாகும்.
09. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2023.07.26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியளவில் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
10. மேலதிக எந்தவொரு விபரங்களையும் 011-2380517 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக மேலேயுள்ள முகவரியிலுள்ள ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்புக்கள் பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**மேலேயுள்ள அனைத்து விடயங்களும் eroc.drc.gov.lk என்ற இணையதளத்திலிருந்து ஒன்லையினில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.**

**தலைவர் - அமைச்சு பெறுகைக் குழு,**
**துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல.: 19, சைத்திய வீதி, கொழும்பு-01.**

Repeat Your Ad For Better Offers

## காணவில்லை

ஹொதமுனிகே துஷாரி டி சில்வா என்ற (36 வயது) நபர் D.M. சீலவதீ என்பவரின் வீட்டில் சில மாதங்கள் வாழ்ந்து, அவர் 2020.01.05ம் திகதி தமாஷா சிவந்தி என்ற குழந்தையைப் பிரசுரித்ததுடன் 2020.06.10ம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். கிட்டத்தட்ட 5 அடி உயரம், பொது நிறம் மெலிந்த உடல் கொண்ட அவர் கூந்தலை நடுவில் பிரித்து பின்பக்கம் சீவியுள்ளார். குழந்தையின் எதிர்கால நலனை நோக்காகக் கொண்டு தகவல்கள் தெரிந்தவர்கள் இருப்பின் தயவுசெய்து அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குழந்தை சம்பந்தமாக தற்போது குளியாப்பிட்டிய மாவட்ட நீதிமன்றத்தில் தத்தெடுத்தல் வழக்கொன்று தாக்கல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஈ.எம்.சேனாதீர ஏக்கநாயக்க,**
**பொலகேவில்ல, பண்டாரகொஸ்வத்த,**
**0776204604, 071-3834901.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### சுகாதார சேவைகள் மாகாண பணியகம் - சப்ரகமுவ

**சப்ரகமுவ மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்காக மருத்துவ, பொதுவான, ததொ மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் நுகர்பொருட்கள் ஆகியவற்றை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல்**

கீழே குறிப்பிட்டுள்ள அம்சங்களில் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து சுகாதார சேவைகள் திணைக்களத்தின் சார்பாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளரின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார். 2023 ஜூலை 14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு விலைமனுக்களை பெற்றுக் கொள்ளல் மூடப்படும்.

| இல. | அம்சம் | எண்ணிக்கை | ஆவணக் கட்டணம் (ரூபாவில்) | விலைமனுப் பிணைப் பெறுமதி (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| **Medical Equipment** | | | | |
| 01. | Opthalmic Operating Microscope | 02 | 5000.00 (per each item) | 380,000.00 |
| 02. | Opthalmic Operating Theatre Table | 01 | | 80,000.00 |
| 03. | AB Scanner | 01 | | |
| 04. | Slit Lamp | 03 | | 130,000.00 |
| 05. | Auto Kereto Refractometer | 02 | | 55,000.00 |
| 06. | Chalazion Removal Equipment set | 01 | | |
| 07. | Ishihara Books | 09 | | 4,000.00 |
| 08. | Retinescope | 10 | | 18,000.00 |
| 09. | ECG Machine (Single Channel) | 18 | | 80,000.00 |
| 10. | CTG Machine | 02 | | 90,000.00 |
| **General Equipment** | | | | |
| 11. | Arm Chair Cushion | 55 | 5000.00 (per each item) | 35,000.00 |
| 12. | Counter Chair (Dispenser Stool) | 50 | | 25,000.00 |
| 13. | Examination Beds | 60 | | 25,000.00 |
| 14. | Executive Chair (High Back) | 100 | | 40,000.00 |
| 15. | Executive Table (Steel) | 75 | | 50,000.00 |
| 16. | Gang Chairs (4x4) (Plastic) | 125 | | 100,000.00 |
| 17. | Glass Cupboard | 40 | | 50,000.00 |
| 18. | Industrial Dryer | 02 | | 40,000.00 |
| 19. | Length Measuring Board | 37 | | 17,000.00 |
| 20. | Office Chair (Low Back) | 40 | | 15,000.00 |
| 21 | Refrigerator (Domestic) | 20 | | 40,000.00 |
| 22 | Steel Cupboards | 110 | | 140,000.00 |
| 23. | Steel Racks | 155 | | 120,000.00 |
| **IT Equipments** | | | | |
| 24 | Desktop Computers | 30 | 5000.00 ( per each item) | 150,000.00 |
| 25. | Laptop Computers | 30 | | 150,000.00 |
| **Technical Machines** | | | | |
| 26. | Bed Lifts for 5 storied building – Base Hospital, Kahawatta | 02 | 5000.00 | 300,000.00 |

| **Consumables** | | | | |
|---|---|---|---|---|
| 27 | Consumables for Eye Surgeries | 150 | 5000.00 | 1% of the bid value |
| i. | Tropicamide with Phenylephrine - Ophthalmic Solution 1% | 150 | | |
| ii. | Proparacaine Hydrochloride 0.5% | 150 | | |
| iii | G. Ketorolac Tromethamine 0.5% | 2000 | | |
| iv. | Black Silk Sutures | 50 | | |
| v. | Tegaderm Plasters | 100 | | |
| vi. | Leuco Plasters | 200 | | |
| vii. | Cassettes for Alcon Centurion Silver Phaeco Machine | 140 | | |

1. விலைமனுதாரரானவர் உரித்தான இயந்திரங்களுக்கான சட்டபூர்வ அங்கீகாரம் பெற்ற வழங்குநராகவிருத்தல் வேண்டும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் செயற்பாடு மூலமாக நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் 2023 ஜூலை 13 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இரத்தினபுரி, தர்மபால மாவத்தை, 75 ஆம் இலக்கத்திலுள்ள சுகாதார சேவைகள் மாகாண பணியகத்தின் பணிப்பாளரிடமிருந்து 045-2222322/045-2222277 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தகவலைப் பெற்றுக் கொள்ளலாம்.

   பணிப்பாளர்,
   சுகாதார சேவைகள் மாகாண பணியகம்,
   இல.: 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.
4. தகைமைகள் மற்றும் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:

   அ. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனி.

   ஆ. உரித்தான இயந்திரங்களின் விற்பனைகளில் 2023 ஜூன் 22 ஆம் திகதிக்கு முன்னராக ஆகக் குறைந்தது 03 வருட அனுபவம்.

   - மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.
5. 2023 ஜூன் 22 ஆம் திகதியன்று ஆரம்பிக்கும் வகையில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு அம்சத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், மேலேயுள்ள முகவரிக்கு (03 ஆம் பந்தியிலுள்ளது) ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித்தனியான எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படல் வேண்டும்.
6. மேலேயுள்ள 03 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரியிலுள்ள கேட்போர் கூடத்தில் 2023 ஜூலை 04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஆவணங்களை கையேற்றுக் கொண்ட சாரார்களுடனான விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.
7. 2023 ஜூலை 14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என அடையாளமிடப்பட்டு ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய உடனேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் சமுகமளித்தலுடன் திறக்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறான தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் ஒவ்வொரு விலைமனுவும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுவை சமர்ப்பிக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் தலைப்பானது தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
9. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு: தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளர், இல. 75, தர்மபால மாவத்தை, இரத்தினபுரி.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சுகாதார சேவைகள் மாகாண பணியக அலுவலகம்,**
**இல.: 75, தர்மபால மாவத்தை,**
**இரத்தினபுரி.**
**22.06.2023.**

The easiest & convenient way to send your Marriage Proposal Ads, classified@lakehouse.lk
Wherever you are... Gather with, SUNDAY OBSERVER Marriage Proposals

தினகரன் விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 ஜூன் 22 வியாழக்கிழமை

# இலங்கை ஏ 226 ஓட்டங்களால் முன்னிலை

தென்னாரிக்க ஏ அணிக்கு எதிரான இரண்டாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் இலங்கை ஏ அணி இரண்டாவது இன்னிங்ஸில் 226 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

கொழும்பு, பீ சரா ஓவல் மைதானத்தில் நடைபெற்றுவரும் போட்டியில் மூன்றாவது நாளான நேற்று முதல் இன்னிங்ஸில் 4 ஓட்டங்களால் பின் தங்கிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை ஏ அணி அபாரமாக துடுப்பெடுத்தாடி ஆட்ட நேர முடிவில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 230 ஓட்டங்களை பெற்றது.



இதன்போது இரண்டாவது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த மினோத் பானுக்க (ஆட்டமிழக்காது 79) மற்றும் பசிந்து சூரியபண்டார (ஆட்டமிழக்காது 73) பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 157 ஓட்டங்களை பெற்றனர்.

முன்னதாக நேற்று 287 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுகளை இழந்த நிலையில் தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த தென்னாபிரிக்க ஏ அணி மேலும் 7 ஓட்டங்களை பெறுவதற்குள் எஞ்சிய 4 விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதன்போது லக்ஷித மானசிங்க 5 விக்கெட்டுகளை பதம்பார்த்தோடு விஷ்வ பெர்னாண்டோ மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கை ஏ அணி தனது முதல் இன்னிங்ஸில் 290 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி இலங்கை ஏ அணி இரண்டாவது இன்னிஸில் 8 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 226 ஓட்டங்களால் முன்னிலை பெற்று தென்னாபிரிக்க ஏ அணிக்கு சவாலான வெற்றி இலக்கொன்றை நிர்ணயிக்க வாய்ப்பை பெற்றுள்ளது.

நான்கு நாட்களைக் கொண்ட இந்தப் போட்டியின் கடைசி நாள் ஆட்டம் இன்றாகும்.

## ஓரியன்ஸ் அணி சம்பியன்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**



கெகிராவ பிராந்திய கிரிக்கெட் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மடாடுகம எம்.எஸ்.கே. அணியை 12 ஓட்டங்களால் வீழ்த்தி கெகிராவ ஓரியன்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை வென்றது. கட்டுகெலியாவ கே.சீ.சீ. மைதானத்தில் நடைபெற்ற இந்த சுற்றுப்போட்டியில் 21 அணிகள் பங்கேற்றதோடு இதன் இறுதிப் போட்டி கடந்த ஞாயிறன்று (18) இடம் பெற்றது. போட்டித் தொடரின் சிறப்பாட்ட வீரராக கெகிராவ ஓரியன்ஸ் அணியின் சமன் தெரிவு செய்யப்பட்டார்.

## சொறிக்கல்முனை யூத் ஏ அணி சம்பியனாக தெரிவு

**சவளக்கடை குறூப் நிருபர்**



சொறிக்கல்முனை சென் அன்டனீஸ் விளையாட்டுக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சொறிக்கல்முனை யூத் ஏ கழகம் சம்பியனானது. அல்தாஜூன் பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற இந்தத் தொடரில் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்த 17 அணிகள் கலந்துகொண்டன. இதன் இறுதிப் போட்டியில் சொறிக்கல்முனை யூத் வீ அணியை 3–0 என்ற கோல் கணக்கில் ஏ அணி வீழ்த்தியது.

## 200 போட்டிகளில் ஆடி ரொனால்டோ சாதனை



ஐஸ்லாந்துக்கு எதிராக வெற்றியீட்டிய ஐரோப்பிய சம்பியன்சிப் தகுதிகாண் போட்டியில் பங்கேற்ற போர்த்துக்கல் அணித் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 200 சர்வதேச போட்டிகளில் ஆடிய முதல் வீரராக உலக சாதனை படைத்துள்ளார். ஐஸ்லாந்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (20) நடைபெற்ற இந்தப் போட்டியின் 89 ஆவது நிமிடத்தில் கோல் புகுத்திய ரொனால்டோ போர்த்துக்கல் அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

2003 ஆம் ஆண்டு சர்வதேச கால்பந்தில் அறிமுகமான 38 வயதான ரொனால்டோவின் 123 ஆவது சர்வதேச கோலாக இது இருந்தது. இதன்மூலம் அதிக சர்வதேச கோல் பெற்ற தனது சாதனையையும் அவர் அதிகரித்துக்கொண்டார்.

## யாழில் சேர் ஜோன் டார்பட் மெய்வல்லுனர் போட்டி

ரிட்ஸ்பரி சேர் ஜோன் டார்பட் கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டிகளின் முதல் சுற்றுப் போட்டிகள் முதல் முறையாக வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்காகவும் நடத்தப்படவுள்ளது.

இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சம்மேளனத்தின் ஏற்பட்டில் சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தயாரிப்பான ரிட்ஸ்பரி அனுசரணையில் நடைபெறும் இந்த மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியின் கனிஷ்ட பிரிவின் முதல் சுற்றுப் போட்டி ஒன்று யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் 19 முதல் 21 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.


இதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு பங்கேற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கொழும்பு, தாஜ் சமுத்ரா ஹோட்டலில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவிலாளர் சந்திப்பிலேயே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் பாடசாலை மெய்வல்லுனர் சம்மேளன தலைவர் குசல் பெர்னாண்டோ மற்றும் ரிட்ஸ்பரி நிறுவன சந்தைப்படுத்தல் பொது முகாமையாளர் நிலுபுல் டி சில்வா ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.




இம்முறை சேர் ஜோன் டார்பட் மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி எதிர்வரும் ஜூன் 24 தொடக்கம் 26 வரை கொழும்பு சுகததாச மைதானத்தில நடைபெறும் அஞ்சலோட்ட களியாட்டப் போட்டிகளுடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 51 ஆவது கனிஷ்ட சம்பியன்சிப் போட்டி நவம்பர் 3 முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதோடு, 91ஆவது சிரேஷ்ட சம்பியன்சிப் போட்டி செப்டெம்பர் 12 முதல் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## களமிறங்குகிறார் சமீர



ஓமான் அணிக்கு எதிராக நாளை (23) நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் இலங்கை முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர களமிறங்கவுள்ளார்.

சிம்பாப்வேயில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் இலங்கை அணி ஆடிய ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான முதலாவது போட்டியில் வலது கை வேகப்பந்து வீச்சாளரான சமீர காயம் காரணமாக இடம்பெறவில்லை.

இலங்கை தனது முதல் போட்டியில் ஐக்கிய அரபு இராச்சியத்தை 175 ஓட்டங்களால் இலகுவாக வீழ்த்தியது. இந்நிலையில் சமீர காயத்தில் இருந்து மீண்டிருக்கும் நிலையில் கசுன் ராஜித்தவுக்கு பதில் களமிறங்கவிருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது. உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஓமான் அணி தனது முதல் ஆட்டத்தில் அயர்லாந்தை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## நியூசிலாந்து மகளிர் அணி இன்று இலங்கை வருகை



இலங்கை மகளிர் அணிக்கு எதிரான டி20 மற்றும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்காக நியூசிலாந்து மகளிர் அணி இன்று (22) இலங்கை வரவுள்ளது.

இலங்கை வரும் நியூசிலாந்து மகளிர் அணி நேராக ஒருநாள் தொடர் நடைபெறவுள்ள காலியை நோக்கி புறப்பட்டுச் செல்லவுள்ளது. ஐ.சி.சி மகளிர் சம்பியசிப்பின் அங்கமாக நடைபெறும் இந்த ஒருநாள் தொடர் வரும் ஜூன் 27 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இந்தத் தொடரின் இரண்டு மற்றும் மூன்றாவது ஒருநாள் போட்டிகள் முறையே ஜூன் 30 மற்றும் ஜூலை 3 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து மூன்று டி20 சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்காக இரு அணிகளும் கொழும்புக்கு வருகை தரவுள்ளன. இந்த மூன்று டி20 போட்டிகளும் பீ. சரா ஓவல் மைதானத்தில் எதிர்வரும் ஜூலை 8, 10 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறும்.

## ஆஸி. பரபரப்பு வெற்றி



இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 2 விக்கெட்டுகளால் பரபரப்பு வெற்றியை பெற்றது.

பெர்மிங்ஹாமில் நடைபெற்ற இந்த போட்டியில் அவுஸ்திரேலிய அணிக்கு 281 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் ஆரம்பத்தில் விக்கெட்டுகளை பறிகொடுத்து தடுமாற்றம் கண்டது. எனினும் கடைசி வரிசையில் வந்த அணித் தலைவர் பட் கம்மின்ஸ் ஒருமுனையில் அபாரமாகதுடுப்பெடுத்தாடி ஆஸி. அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (20) கடைசி நாள் ஆட்டத்தின் கடைசி நேரத்தில் அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுகளை இழந்து 282 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. கம்மின்ஸ் ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆஸி. 1–0 என முன்னிலை பெற்றுள்ளது.

## ஜூலை 9 இல் இலங்கை வரும் பாகிஸ்தான் அணி



பாகிஸ்தான் அணியின் இலங்கை சுற்றுப்பயணத்தின் போட்டி அட்டவணையை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆட இலங்கை வரவுள்ள பாகிஸ்தான் அணி எதிர்வரும் ஜூலை 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் இரண்டு நாள் பயிற்சிப் போட்டியில் ஆடவுள்ளது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச அரங்கில் ஜூலை 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடந்து கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் ஜூலை 24 ஆம் திகதி இரண்டாவது டெஸ்ட் போட்டி ஆரம்பமாகவுள்ளது.

இந்த இரு டெஸ்ட் போட்டிகளும் ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்தின் ஓர் அங்கமாகவே இடம் பெறவுள்ளது. இந்த டெஸ்ட் தொடரில் ஆடுவதற்காக பாகிஸ்தான் அணி எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதி இலங்கை வரவுள்ளது.

# சர்வதேச செய்திகள்

## ஹொன்டுராஸ் சிறைக்குள் கலவரம்: 41 பெண்கள் பலி



ஹொன்டுராஸில் உள்ள பெண்கள் சிறை ஒன்றில் இடம்பெற்ற கலவரத்தில் குறைந்தது 41 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறையில் உள்ள ஒரு கும்பல் சிறைக் கூடம் ஒன்றை எரித்ததை அடுத்து இரு போட்டி கும்பல்களுக்கு இடையே கடந்த செவ்வாய்க்கிழமை (20) மோதல் வெடித்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தீ காரணமாகவே பெரும்பாலானவர்கள் உயிரிழந்திருப்பதோடு சிலர் துப்பாக்கிச் சூடு மற்றும் கத்திக்குத்துக்கும் இலக்காகி இருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதில் காயமடைந்த கைதி ஒருவரை சிறைச்சாலைக்கு வெளியே உள்ளூர் ஊடகங்கள் பேட்டி கண்டபோது, பொரியோ 18 கும்பல் சிறைக் கூடம் ஒன்றுக்குள் நுழைந்து மற்றக் கைதிகளை சுட்டு, தீ வைத்தனர் என்று குறிப்பிட்டுள்ளார். இதில் காயமடைந்த பல கைதிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## நீர்மூழ்கிக் கப்பல் மாயமான இடத்தில் 'சத்தம்' கேட்டது



வட அட்லான்ட்டிக் பெருங்கடலின் அடியில் காணாமல்போன நீர்மூழ்கிக் கப்பலைத் தேடும் பணியில் கப்பல் காணாமல் போன இடத்துக்கு அருகே சத்தம் கேட்டதாக அமெரிக்கக் கடலோரக் காவல்படை தெரிவித்தது.

சோனார் எனும் ஒலி பரப்புதல் வழி தேடல் மீட்புக் குழுக்கள் சத்தத்தைக் கேட்டறிந்தனர்.

டைடன் எனப்படும் சுற்றுப்பயண நீர்மூழ்கிக் கப்பலில் 5 பயணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று (18) மூழ்கிய டைட்டானிக் கப்பலின் சிதைவுகளை பார்க்கச் சென்றிருந்தனர்.

பயணிகள் உயிருடன் இருக்கிறார்கள் என்பதைக் குறிக்கும் முதல் அறிகுறியாக அந்தச் சத்தம் அமைகிறது. அது 30 நிமிடங்களுக்கு ஒருமுறை கேட்டுள்ளது.

என்றாலும் தொலைவில் இருந்து இயக்கப்படும் நீருக்கடியில் இயங்கும் வாகனங்கள் இதுவரை எதிர்மறையான முடிவுகளையே தருகின்றபோதும் தொடர்ந்து தேடுதல் இடம்பெற்று வருவதாக கடலோரக் காவல் படையினர் ட்விட்டரில் தெரிவித்துள்ளனர்.

நீர்மூழ்கிக் கப்பலில் ஒட்சிசன் குறைந்து வருவதால் அதனைத் தேடும் பணி தீவிரமடைந்துள்ளது. அட்லாண்டிக் பெருங்கடலில் 19,650 சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்கு தேடுதல் வேட்டை நடைபெறுகிறது. அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன், ஆழ்கடல் ஆய்வு நிறுவனங்கள் பலவும் இந்த மீட்புப் பணியில் கைகோர்த்துள்ளன.

நீர்மூழ்கி காணாமல் போன இடம் தொலைதூர பகுதி என்பதால் தேடுதல் பணி கடினமாக இருப்பதாக அமெரிக்க கடலோர காவல்படை தெரிவித்துள்ளது.

## பலஸ்தீன துப்பாக்கிச் சூடு: நான்கு இஸ்ரேலியர்கள் பலி



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை குடியேற்றம் ஒன்றுக்கு அருகில் கடந்த செவ்வாயன்று (20) இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு ஒன்றில் நான்கு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இரு பலஸ்தீன துப்பாக்கிதாரிகள் உணவகம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நடத்திய அந்த தாக்குதலில் மேலும் நால்வர் காயமடைந்திருப்பதோடு ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

தாக்குதல்தாரிகள் "ஹமாஸுடன் தொடர்புபட்ட பயங்கரவாதிகள்" என்று இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இதில் ஒரு துப்பாக்கிதாரி ஆயுதம் வைத்திருந்த இஸ்ரேலிய பொதுமகன் ஒருவரால் சுட்டுக்கொல்லப்பட்ட நிலையில் இரண்டாமவர் கார் ஒன்றை திருடி சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற நிலையில் இஸ்ரேலிய படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஆறு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்ட ஜெனின் அகதி முகாம் மீது கடந்த திங்களன்று (19) இஸ்ரேலிய இராணுவம் நடத்திய சுற்றிவளைப்புக்கு பதிலடியாகவே இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## பாகிஸ்தானிடம் கோரிக்கை

பாகிஸ்தானில் தங்கி இருப்பதற்கான உரிய ஆவணங்களைக் கொண்டிராத நிலையிலும் விசா முடிவடைந்த நிலையிலும் தங்கி இருந்தமையால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆப்கானிய புலம்பெயர்வாளர்களை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தானிடம் ஆப்கானிஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளது.

மருத்துவ சிகிச்சை உட்பட பல தேவைகளின் நிமித்தம் ஆப்கானியர்கள் பாகிஸ்தானுக்கு வருவதாகவும் அவர்களால் தம் தேவைகளை உரிய காலத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் விசா மற்றும் தங்கி இருப்பதற்கான ஆவணங்களின் கால எல்லை முடிவுற்ற பின்னரும் தங்கி இருக்கும் நிலை ஏற்படுவதாகவும் ஆப்கானிஸ்தான் சுட்டிக்காட்டியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 22ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.